
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#854**
**Sep-Oct 2009**

**பொருளடக்கம்**

✡ பரிணாமவாதமும் வேதாகமமும்.................................. 2

✡ டார்வினின் பரிணாமவாதக் கொள்கை பற்றிய ஆராய்ச்சி.............................. 13

✡ வேதாகமமும் பரிணாமவாதக் கொள்கையும்.................................. 20

BS Tamil Version - 89

2024

# பரிணாமவாதமும் வேதாகமமும்

Evolution and the Bible

**"தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." ஆதி. 2:7** (NKJV)

சார்லஸ் டார்வின் இயற்கை பற்றிய தம்முடைய பேரார்வத்தினால் தூண்டப்பட்டதைத் தேடி பசிபிக் கடலில் பயணம் செய்தார். அவரது, ஆய்வு முடிவுகள் - உலகத்தின் மதசார்பற்ற மற்றும் மதசம்பந்தப்பட்ட நோக்குகளை ஆழமாக மாற்றியமைத்திருக்கிற - எல்லாம் அவருடையதல்லாத கருத்துக்களை - வடிவமைக்க அவரை வழிநடத்தின. பூமி அண்மையில் தோன்றியது என்ற கருத்து அந்த காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. டார்வினுடைய கொள்கைக்கு அதிக பழமையான கிரகம் தேவைப்பட்டதுடன், அது கசப்பான விவாதத்தை உருவாக்கியது. இருப்பினும், தாமஸ் H ஹக்ஸ்லே மற்றும் "தொகுத்துக் கூறுதல்" என்ற தனது சொந்தக் கொள்கையை முன்வைத்த ஜெர்மானிய விஞ்ஞானியான எர்னஸ்ட் H ஹேக்கல் போன்ற பிரபலமான மனுஷர்களின் வலுவான ஆதரவான வாதங்கள் மூலமாக, விஞ்ஞான உலகில் பரிணாமவாதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடாக மாறியது. விலங்கியலாளரும், எழுத்தாளரும் டார்வினுடைய சீடன் என்று தன்னை அறிவித்தவருமான ரிச்சாட் டாவ்கின்ஸ் அவரை, பிரிட்டன் உருவாக்கியதிலேயே மிகப் பெரிய விஞ்ஞானி என்று அழைத்தார்.

எனவே அது ஆதாமும், ஏவாளும் "வெளியேயும்," DNA - "உள்ளேயும்" இருக்கிறது போலக் காணப்படுகிறது. மரபு குறியீடாகிய டி.என்.எ - DNA (Deoxyribo nucleic acid) அதன் 64 - "வார்த்தை" வடிவ கட்டமைப்போடுகூட ஜீவிக்கிற சகல சிருஷ்டிகள் எல்லாவற்றின் செல் வளர்ச்சியையும் ஒழுங்குபடுத்தும் பொறுப்பாளியாயிருக்கிறது. நவீன கால டார்வின் கொள்கை ஆதரவாளர்கள், இந்த கூற்றை டார்வினின் அடிப்படை கருத்துகளுக்குச் சான்றாக பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

"இயற்கையான தேர்வு என்ற வழிமுறையின் மூலம் இனங்களின் தோற்றம்" - (The Origin of the species by means of natural selection) என்ற டார்வினுடைய புகழ் பெற்ற படைப்பு 1859-ல் வெளியிடப்பட்டதற்கு பின்பு சந்தேகமின்றி பரிணாமவாதபோதனையானது இலட்சக்கணக்கானோருடைய விசுவாசத்தை அழித்தது. கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக, விஞ்ஞானிகளான மால்தஸ் முதல் மெண்டெல் வரை செய்யப்பட்ட ஆராய்ச்சி, அந்த கொள்கையின் முன்னேற்றத்திற்கு ஆதரவு கொடுத்ததுடன், சிருஷ்டிப்பு பற்றிய வேதாகம உபதேசங்களுக்கு எதிராக எண்ணற்ற விவாதங்களை உருவாக்கியது.

இது பரிணாமவாதம் மற்றும் சிருஷ்டிப்பு முகாம்களுக்குமிடையே காரசாரமான விவாதத்தை உருவாக்கியது. இந்த விவாதத்துக்குள்ளே போப்பு அடியெடுத்து வைத்தார். "பரிணாமம் பற்றி கோட்பாடு அனுமானமான கருத்துக்கும் மேலானது" என்ற ஜாண் பாலின் அறிக்கை, கத்தோலிக்க சபையின் நீண்ட கால கொள்கையை உறுதிப்படுத்துகிறது - கத்தோலிக்க பள்ளிகளில் பரிணாமம் நீண்ட காலமாக போதிக்கப்பட்டு வருகிறது. - இது முக்கியத்துவம் வாய்ந்த பகிரங்கமான விட்டுக் கொடுத்தலாயிருக்கிறது. மேலும் அநேக கிறிஸ்தவர்களால் ஏமாற்றத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பரிணாமவாத கொள்கை பற்றிய ஒரு ஆய்வு

பரிணாமவாதத்தின் மூலமாக முன்மொழியப்பட்ட கருத்தின்படி, மரபுவழி குறியீட்டில் (genetic code) ஏற்படுகிற விபத்துகளிலிருந்து வளர்ச்சியடைகிற புதிய இனங்களும் ஒரே மாதிரியான வளர்ச்சியடைகிற, ஆனால், தனி விதமான இனம் தோன்றுகிறது என்பது, இந்த ஆய்வில் பெருமளவில் தற்போதைய சிந்தனையின் அடித்தளமாக உருவாகி வருகிறது.

"Punctuated Equilibrium - "நிறுத்தப்பட்ட சமநிலை-கோட்பாடு" என்பது இனங்களில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்துவதும், அதன்பின்பு நீண்ட காலத்துக்கு மெதுவாக நகர்ந்து செல்வதுமான, ஒரு வகை விரைவான தாவுதல் பரிணாமமாகும் - இது ஒரே காரியத்தை இன்னொரு முறையில் நோக்குவதாகும். மனுஷன் இயற்கையான பொதுமுறையான சக்தியின் ஒரு உற்பத்தி பொருளாயிருக்கிறான். வேறுவிதமாகச் சொல்வதென்றால், அவன் ஒரு எதிர்பாராத நிகழ்வு, எனினும், நற்பேறு பெற்றவனாக இருக்கிறான்.

அமெரிக்காவில் முதன்மையான தொல்லுயிரியல் வல்லுநரும், பரிணாமவாதத்திற்கான மிக முக்கியமான செய்தி தொடர்பாளர்களில் ஒருவருமான S.J. குல்டு என்பவர் மனுஷனுடைய தோற்றங்கள் பற்றிய பரிணாமவாத

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

விளக்கங்களானது பாரம்பரிய மதசம்பந்தமான நம்பிக்கைகளை அகற்றி வருவதாக நம்பிக்கை கொண்டிருக்கிறார். அவர் மேலும் கூர்ந்து பார்த்ததில் இந்த பூமியில் மனுஷனுடைய வாழ்நாளைக் காட்டிலும் பாக்டீரியாவினுடைய வாழ்நாள் மிகவும் பெரிய அளவில் அதிகப்படியாயிருக்கிறது. அத்துடன் மனித இனம் இறந்து போய் இராமற்போகையில் பாக்டீரியா, தொடர்ந்து இருக்கும். கிறிஸ்தவ மதநம்பிக்கைக்கொள்கைகள் தேவனுக்கு மாத்திரம் உபயோகிக்கிற அந்த வாக்கியத்தை அவர், அவைகள், "இருந்தன, இருக்கின்றன, எப்போதும் இருக்கும்" என்று பாக்டீரியாவுக்கு உபயோகிக்கிறார்.

அநேக பரிணாமவாத கொள்கையுடையவர்கள் தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் (நாத்திகர்கள்). புத்தியுக்தியுள்ள சிருஷ்டிகர் ஒருவர் இல்லாமல், இந்த பிரபஞ்சமும், அதன் தாவரம் மற்றும் விலங்கு இன உயிரிகளின் தொடர்ச்சியான முற்றிலும் உருமாறுதல் – அதாவது ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கு மாறுதல் மூலமாக தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொண்டன என்று அவர்கள் போதிக்கிறார்கள். ஆயினும் டார்வினிய பரிணாமவாதிகளின் கொள்கை என்னவென்றால், தேவன் முதலில், மூலப் பொருளை அதன் விசைகளை, முதல்வடிவத்தை அல்லது மேலும் தாழ்ந்த தேர்ந்தெடுப்பாக, தாவரம் மற்றும் விலங்கின உயிரிகளில் முதல் கொஞ்ச வடிவங்களையே சிருஷ்டித்தார். அதுமுதற்கொண்டு, அவைகள் தங்களைத் தாங்களே எப்போதும் உயர்ந்த வடிவங்களுக்குள்ளாக வளர்த்துக் கொண்டு மனுஷனில் உச்சத்தையடைந்தன. இந்த பரிணாமவாதிகள் (அவர்களில் சிலர் பாதிரியார்களாகவும் இருப்பது காணப்படுகிறது) பகிர்ந்திட விரும்புகிற கருத்துப்பதிவு மனிதக் குரங்கிலிருந்து (ape) மனிதன் தோன்றினான் என்ற அவர்களுடைய கொள்கை இக்காலத்தில் பொதுவாக அறிஞர்களாலும், பெரும்பாலும் பாதிரியார்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது எந்தவழியிலும் உண்மையல்ல. இருந்தாலும் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும், அநேக பேர்ச்சபைகளிலும் கூட இந்த கொள்கை இருந்து கொண்டிருக்கிறது; மேலும் தொடர்ந்து "இன்னமும்" போதிக்கப்பட்டும் வருகிறது. மேலும் அநேக அரும் பொருட்காட்சியகத்திலுள்ள காட்சிப் பொருள்கள், புத்தகங்கள், பத்திரிக்கைகள், நாளிதழ்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் முதலானவற்றிலும் இன்னும் பரிந்துரைக்கப்பட்டு வருகிறபடியால் அநேகர் ஏறக்குறைய அதைப்பற்றி அதிகமாக எப்போதுமே எண்ணிப்பார்க்காமல் அல்லது அது பகுத்தறிவு, உண்மை செய்திகள் மற்றும் வேதாகம போதனைகளுடனும் இசைவிலிருக்கிறதா இல்லையா என்று தாங்களாகவே பரிசோதித்தறியாமல் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாம் இங்கே அதனை ஆதரிக்கும்படியாக முன்வைக்கப்பட்டுள்ள சில முக்கியமான விவாதங்களை சோதித்துப் பார்ப்பதும், கூடவே அதற்கு எதிரான சில வலுவான விவாதங்களை முன்வைப்பதும் பொருத்தமாயிருக்கிறது.

முதலாவது, பரிணாம கொள்கையானது, அதிகப்படியான மிதமிஞ்சிய அனுமானங்கள் மீது கட்டப்பட்டுள்ளது. அவை அந்த கொள்கைக்கு அத்தியாவசியமான பரிணாமவாதிகளின் அனுமானங்களில் மிக உச்ச அளவிலான பலவகை வேற்றுமைகள் இருக்கின்றன என்ற உண்மை அது நம்பத்தகுந்ததல்ல என்பதை நிரூபிக்கப்படுகின்றன. அவர்களில் சிலர், மனுக்குலம் 2,000,000 வருடங்களாக இருந்து வருவதாக ஊகிக்கின்றனர்; மற்றவர்களோ 1,000,000 வருடங்கள் என்று ஊகிக்கின்றனர்; இந்த இரண்டு இலக்கங்களுக்கிடையே பெரும்பாலும் முடிவில்லாத வித்தியாசங்கள் இருக்கின்றன. அரிதாக அவற்றுள் ஏதேனும் இரண்டு, இந்த ஊகங்களில் ஒத்திருக்கும். அவர்களில் சிலர் பூமியின் வயது 50,000,000 (50 மில்லியன்) வருடங்கள் ஆக இருக்கும் என்றும் மற்றவர்களோ 4000,000,000 (4 பில்லியன்) வருடங்கள் என்றும் யூகிக்கின்றனர். அவர்களில் சிலர் தாவர உயிரிக்குரிய காலப்பகுதிக்கு 3000,000,000 (3 பில்லியன்) வருடங்களை நியமிக்கின்றனர், மற்றவர்களோ சுமார் 40,000,000 (40 மில்லியன்) வருடங்களையும், மற்ற பிறருடைய பங்கில் இந்த இரண்டு உச்ச அளவுகளுக்குமிடையே எல்லாவித வித்தியாசங்களுடனும் பங்கிட்டளிக்கின்றனர். அவர்களில் சிலர் தாங்கள் சொந்தமாக தயாரித்த பித்தகான்துரோபோஸ் (pithecanthropos) (குரங்கு மனிதன் - ape man) 7,50,000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தான் என்று வலியுறுத்துகின்றனர்; மற்றவர்களோ தங்களுடைய கற்பனையான இந்த கட்டுக்கதையில் 3,75,000 வருடங்களுக்கு முன்பாகவே வாழ்ந்ததாக உரிமை கோரிக்கை வைக்கின்றனர். காலத்துடன் இணைக்கப்பட்டுள்ள பெரும்பாலான அனைத்தைப் பற்றியும் அவர்கள் பெரிய அளவில், மேலும் பெரிய அளவில் ஒருவருக்கொருவர் முரண்படுகின்றனர்.


நிச்சயமாகவே பகுத்தாராய்கிற ஜனங்கள், மனம் போல் கற்பனை செய்கிற ஜனங்களிடமிருந்து வேறுபட்டவர்களாக, உடனடியாக இந்த காரியங்கள் மீது பெரிதளவு ஆராயாது ஏற்றுக் கொண்ட யூகத்தை சார்ந்திருக்கிறது குறைந்த அளவு உண்மை மட்டுமே உள்ளது என்பதையும், மற்றபடி அப்படிப்பட்ட அத்தியாவசியமான விஷயங்களில் பகுத்தறிவுக்கு இசைவாக இருப்பார்கள் என்பதையும் காண்கிறார்கள், திரு.டார்வின் பரிணாமத்தைப் பற்றிய அவருடைய இரண்டு முக்கியமான மூலதத்துவ படைப்புகளில் அவருடைய பொதுக் கொள்கையை உண்டாக்குவதில், 800 தடவைகள் யூகத்தை வெளிப்படுத்துகிற பதங்களை – "நாங்கள் ஆலோசிக்கிறோம்." "நாம் நினைத்துக் கொள்வோமானால்," "ஒரு வேளை அது அப்படியாக இருந்திருக்கலாம்" போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறார். அவர் தமது கொள்கையை, ஒன்றையொன்று பின்னிச்சார்ந்துள்ள 800 ஊகங்கள் மீது உருவாக்கினார். இந்த வகையில் உருவாக்க இந்த கொள்கைக்கு, கூட்டு நிகழ்தகவு விதியை (rule of compound probability) உபயோகித்து மிகவும் தாராளமாக, அவருடைய

800 ஊகங்களும் சரியானதென்று சமமான வாய்ப்பை அனுமதிப்பது, ஒரு வாய்ப்பிலிருந்து ஒவ்வொரு விஷயத்திலும் அவர் சரியாயிருக்க பாதியளவு வாய்ப்பு இருக்கிறது. அந்த கொள்கை சரியானதாயிருக்கிறதான வாய்ப்பு ஒன்றாயிருக்க, அது தவறென்று 241 இலக்கங்களாலும், இரண்டு முறைபெருக்கப்பட்ட 800-ன் வர்க்கமாகவும் குறித்துக் காட்டப்பட்டிருக்கிற வாய்ப்புகள் உள்ளன. இலக்கங்களின் ஒரு தொகுப்பாகிய இது ஒரு அங்குலத்துக்கு பன்னிரண்டை அனுமதித்த நிலையில் 20 அங்குலங்கள் கொண்ட வரிசைக்கு எழுத்திடைவெளி இந்த கட்டுரை எழுதப்பட்ட வகையிலான அளவுக்கு அதாவது நம்முடைய வரிசைகளில் 6-க்கும் மேல் அவசியப்படுவதாயிருக்கும்! மிகவும் பெரிதான அளவில் பொருத்தமற்ற ஒருகொள்கை விஞ்ஞானமாக ஒரு போதும் போதிக்கப்படக் கூடாது என்பது மெய்யான அறிவாகும். அதற்கு மாறாக அது நீண்ட காலத்துக்கு முன்பே, சிந்திப்பதற்கு மிகவும் பொருத்தமற்றதாக குப்பைக் கூடைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பரிணாமவாதிகளின் கற்பனை படைப்பையும், ஊகங்களையும், நிராகரிக்கும் அதே வேளையில், மனுஷனுடைய குடியிருப்புக்கென்று, பூமியின் சிருஷ்டிப்பும் அதனை ஆயத்தப்படுத்தி, ஒழுங்குபடுத்தும் வேலையும் மிகக்குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட்டன என்பதை வலியுறுத்துகிற எதிரான உச்ச எல்லைக்கும் நாம் போக வேண்டாம். வேதாகம அறிவிப்பில், தேவன் பூமியின் மீது காரியங்களை ஒழுங்கமைக்க, மனுஷருடைய குடியிருப்புக்கென, அதனை ஆயத்தப்படுத்த எடுத்துக் கொண்ட "நாட்களில்" முதல் நாள் தொடங்குவதற்கு முன்பு (ஆதி. 1:3-5) பூமியை சிருஷ்டிக்க தேவன் எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டார் என்றும் (ஆதி. 1:1) அல்லது வசனம் 2-ல் விவரிக்கப்பட்ட நிலைமைக்கும் பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கும் இடையில் எவ்வளவு காலம் கடந்து சென்றது என்றும், ஆதி. 1:2-ல் விளக்கப்பட்டிருக்கிறபடி "பூமியானது இருந்தது" அதாவது "ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது" என்ற போதிலும், அவற்றுக்கிடையே எவ்வளவு கால இடைவெளி நீடித்தது என்றோ, தேவனுடைய வல்லமையாகிய ஆவி ஆழங்களிலிருந்த ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தது அல்லது சக்தியூட்டி இயக்கியது எவ்வளவு காலத்திற்கு என்றும் நமக்கு சொல்லப்படவில்லை என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

## ஆதியாகம நாட்கள்
## 24 மணி நேரம் கொண்டதல்ல

இந்த "நாட்கள்" 24 மணி நேரம் கொண்ட காலப்பகுதிகள் மட்டுமே என்று நாம் நினைக்கக் கூடாது, ஏனெனில் "நாள்" என்ற பதம் வேதாகமத்திலும், பொதுவான பயன்பாட்டிலும், அடிக்கடி இன்னும் அதிகமான நீண்ட காலப்பகுதியைக் குறித்துக்காட்டுகிறது. வேதாகமத்தில் இது 40 வருட காலத்தையும் (சங். 95:7-10), ஓர் 1000 வருட காலப் பகுதியையும் (2 பேது. 3:8) குறித்திட பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் நாம் காண்கிறோம். மேலும் பொதுவான பயன்பாட்டில் நாம் லுத்தரின் நாள், வாஷிங்டனின் நாள் என்றும் சொல்கிறோம். ஆதி.1-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நாட்கள், சூரிய - நாட்கள் அல்ல, ஒவ்வொன்றும் 24 மணி நேரம் கொண்டதல்ல, ஏனெனில் சூரியனோ அல்லது சந்திரனோ நான்காவது நாள் வரைக்கும் காணப்படவே இல்லை (ஆதி. 1:14-18); மாறாக அவை நீண்ட காலத்தைக் கொண்ட பகுதிகளாகும். இந்த "நாட்களில்" ஏழாவது, 7000 ஆண்டுகள் கொண்டது என்பதாக வேதாகமம் காண்பிக்கிறது. (The Time is At Hand; "காலம் சமீபமாயிருக்கிறது" அத்தியாயம் 2 ; "புது சிருஷ்டி" பக்கம் 19 மற்றும் "The Photo Drama of Creation" "சிருஷ்டிப்பின் நிழற்பட நாடகம்" பார்க்கவும்); எனவே மற்றவைகள் நியாயமாக அதே நீளத்தைக் கொண்டவையாகத் தோன்றி, எல்லாமுமாக 49000 (7 x 7000)வருடங்கள் கொண்ட காலப்பகுதியை ஏற்படுத்துகிறது. இந்த நோக்குநிலையில் இருந்து அந்த விஷயத்தைப் பார்க்கையில் சிருஷ்டிப்பு சம்பந்தப்பட்ட மெய்யான வேதாகம வாக்கியங்களுக்கும் (இருண்ட யுகங்களிலிருந்து பெறப்பட்ட மதப்பிரிவுகளின் நோக்குகளிலிருந்து வேறுபட்டு இருக்கிறதான) விஞ்ஞானப் பூர்வமான உண்மைகளின் கண்டுபிடிப்பு பற்றிய உறுதியான முடிவுகளுக்கும் இடையே கருத்துவேறுபாடு இல்லை என்றாலும் இந்த வாக்கியங்களுக்கும், பரிணாமவாதிகளின் ஆழ்ந்து ஆராயப்படாத அனுமானங்கள் மற்றும் ஊகங்களுக்கும் இடையே அதிகமான முரண்பாடுகள் இருக்கின்றன.




## "கிடைக்காமல்போன தொடர்புகளுக்கான" பலனற்ற தேடுதல்


Missing Links- "கிடைக்காமல்போன தொடர்புகள்" என்று அழைக்கப்படுகிறவற்றை குறிப்பாக மனுஷனுக்கும், மனித குரங்குக்கும் இடையில் தேடும் நோக்கில் பரிணாமவாத கொள்கையாளர்கள் வானத்தையும், பூமியையும் அசைத்துவிட்டனர், ஆனால் சந்தேகமற்ற ஒன்றை ஒரு போதும் கண்டுபிடிக்கவில்லை. அவர்களில் சிலர் நான்கு நிரூபிக்கப்படாத "கிடைக்காமல்போன தொடர்புகள்" மனிதனுக்கும், மனித குரங்குக்குமிடையே இருப்பதாக கருத்து தெரிவித்தனர் - அவை பித்தேகான்த்ரபோஸ், ஹெய்டல் பெர்க் மனிதன், பில்ட்டௌன் மனிதன் மற்றும் நியாண்டர்தால் மனிதன். ஆனால் அவை ஆழமான பரிசோதனையை தாங்கி நிற்க முடியாது. குறிப்பாக இப்போது பில்ட்டௌன் மனிதன் திட்டவட்டமாக, வேதியியல் பரிசோதனைகள் மற்றும் வேறுவிதங்களிலும் கூட, ஒரு ஏமாற்று என்று நிரூபிக்கப்பட்டதிலிருந்து பெரும்பாலான விஞ்ஞானிகள் அவைகளை ஏளனம் செய்து சிரிக்கின்றனர்.

இப்படியாக நிரூபிக்கப்படாத "கிடைக்காமல்போன தொடர்புகள்" எப்படி தோன்றின என்பது பின்வரும் பகுதியில்

தெரிவிக்கப்படுகிறது. Dr.டுபாய்ஸ் என்ற தீவிரமான பரிணாமவாதி, 1892–ல் ஜாவாவில் ஏதோ ஒரு மண்ணில் மண்டை ஓட்டின் உச்சியின் ஒரு சிறுபகுதியையும், ஒரு பல்லையும் கண்டு பிடித்தார். பிந்தினது முந்தினதில் இருந்து மூன்றடி தூரத்திலிருந்தது; மேலும் ஐம்பது அடி தள்ளி, சில இடத்தில் உள்ள மணலில், அவர் இன்னொரு பல்லையும், தொடை எலும்பு ஒன்றையும் கண்டார். இவை அதே விலங்கினுடையது – "அந்த கிடைக்காமல்போன தொடர்பு" என்று அவர் வலியுறுத்தினார். அவைகளுடைய கண்டு–பிடித்தலுக்கு சற்று பிறகு முதன்மையான ஐரோப்பிய விஞ்ஞானிகள் இருபத்தி நான்குபேர் இந்த நான்கு துணுக்குகளையும் பரிசோதனை செய்தனர். அவர்களில் பத்துபேர் அவையெல்லாம் ஓர் மனிதக்குரங்கைச் (ape) சார்ந்தது என்றார்கள்; ஏழுபேர், அவை ஒரு மனிதனு–டையவை என்றும், வேறு ஏழுபேர் (பரிணாமவாதிகள்) அவை "கிடைக்காமல்போன தொடர்பு" என்றும் சொன்னார்கள். பேராசிரியர் விர்கோவ்: "இந்த எலும்புகள் யாவும் ஒரே உயிரினத்தின் பகுதிகள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை." ஆனால் பரிணாமவாதிகள் இந்த இரண்டு பற்களுடனும், ஒரு தொடை எலும்புடனும் மண்டை ஓட்டின் சிறு உச்சி பகுதியையும் வைத்துக் கொண்டு, என்ன செய்தார்கள்? அவர்கள் இந்த கற்பனையின் மீது ஒரு மீளுருவாக்கியின் வரைவை மேற்கொண்டு, அவர்கள் 'கிடைக்காமல்போன தொடர்பு' என்று எதை எண்ணினார்–களோ, அந்த உருவம் முழுவதையும் கட்டமைத்து இந்த மந்தமான உருவத்தை 'பித்தேகான்துரோப்போஸ்' Pithecanthropos- குரங்கு மனிதன் என்று அழைத்தார்கள்.

இங்கிலாந்தில் உள்ள பில்ட்டௌன் (piltdown) என்ற இடத்திலும் இதைப் போலவே ஜெர்மனியில் ஹெய்டெல்–பெர்க் மற்றும் நியாண்டர்தால் என்ற இடங்களிலும் கூட, மிகச் சிறிய அளவில் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த மூன்று இடங்களின் கண்டுபிடித்த எலும்புகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்தால் ஒரு மரக்கால் கூடையைக்கூட நிரப்பாது. ஒரு மனித எலும்புக் கூட்டை மிகக் குறைவாகவே நிரப்பும். அதே "மீளுருவாக்கம்" அவருடைய கற்பனையின் படி வடிவமைத்ததில், இந்த கொஞ்ச எலும்புகளிலிருந்து மூன்று "குரங்கு மனிதர்" வடிவங்கள் கிடைத்தன. இந்த உருவங்கள் யாவும் பரிணாமவாத ரூபங்கள் – கற்பனைகள்! உண்மையில் உயிரியல் வல்லுநர்களின் நகைப்புக்கு இடமான பரிணாம வளர்ச்சியை இழிபடுத்தும் நினைவுச் சின்னங்கள் இருந்தும், "திட்டமிட்டபடி" அவை அதிகமாக பயன்படுத்தப்பட்டு, வருவதுடன், அவைகளில் சில வளர்ச்சி–யடையாத சிறுபிள்ளைகளுக்கும் மோசமாக சிந்திக்கிற பெரியவர்களுக்கும், தாழ்ந்த மிருகங்களிலிருந்து மனிதன் மரபுவழி வந்தவன் என்ற கருத்தை மனதில் நிரப்ப இப்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மனிதனுடைய தோற்றம் குறித்து, சில புதைப் படிவங்களின் சிறு பாகங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட எதையாவது உருவாக்க முயற்சிக்கின்ற முட்டாள்தனம், சில வருடங்களுக்கு முன்பாக ஒரு ஓடையின் படுக்கையில் கண்டெடுக்கப்பட்ட "Million dollar tooth- மில்லியன் டாலர் பல்" சம்பவத்தின் மூலமாக நன்கு விளக்கப்படுகிறது. தலைசிறந்த பரிணாமவாதிகளால் இது புகழ்பெற்ற கற்பனையான "கிடைக்காமல்போன தொடர்பு" சார்ந்த தாடையிலிருந்து தான் நிச்சயமாக வெளிவந்–திருக்கும் என்றும் கருதப்பட்டது. ஆனால் கொஞ்ச காலத்–துக்குப் பின்பு, இதைப்போன்ற பற்கள் ஒரு காட்டுபன்றியின் தாடையில் கண்டெடுக்கப்பட்ட போது அவர்கள் அடைந்த பெரும் ஏமாற்றத்தை கற்பனை செய்து பாருங்கள்!




## பில்ட்டௌன் மனிதன் ஒரு ஏமாற்று

"பில்ட்டௌன் மண்டை ஓடு" போலியாக உருவாக்கப்–பட்டது என்று பில்ட்டௌன் மனிதனைப் பற்றி பிரிட்டிஷ் மியூசியத்தில் அறிவிக்கப்பட்ட செய்தி, விஞ்ஞான வட்டாரங்களில் மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியதில் ஒன்றாக இருக்கிறது.

பில்ட்டௌன் மனிதனைப் போலி என்று அம்பலப்படுத்தியதில், பிரிட்டிஷ் மியூசியம் செய்தி வெளியீடு விவரித்து சொன்னது என்னவெனில், அறியப்படாத ஏதோ ஒரு "துறை – நிபுணர்" **(a)** பெரிய மனிதக் குரங்கின் கீழ்தாடையின் முன்பகுதி உடைத்து; **(b)** இரண்டு கடைவாய் பற்களைத் தவிர அதன் எல்லா பற்களையும் நீக்கிவிட்டு **(c)** அந்த தாடை எலும்பை, புதைந்து கிடந்த மண்டையோட்டு எலும்புகளைப் போல பில்ட்டௌனில் இருந்த சாரளைக்கல் குழியில் (gravel pit) காணப்படும் படி வண்ணம் பூசினார்; **(d)** இந்த சரளைக்கல் குழிக்குள்ளாக இவ்வாறு பக்குவப் படுத்திய அந்த தாடை எலும்பை, அந்த எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் மிகுந்த திறமையுடன் சொருகி வைத்தார். அந்த இரண்டு நிபுணர்கள் புதைப் படிமங்களைத் தேடுகையில், இந்த தாடை எலும்பின் மீது வந்து, அந்த சரளைக்கல் கலையாமல் இருந்ததை உறுதியாக நம்பினர்; **(e)** இன்னொரு மண்டையோட்டைச் சேர்ந்த ஒரு மண்டை–யோடு எலும்பை அந்த சரளைக்கல் குழியில் கண்டெடுக்கப்–பட்ட புதை பொருள் படிமம் போல தெரியும் படி போலியாக உருவாக்கி வைத்தனர்; **(f)** போலியாக ஒரு கடைவாய்ப் பல்லை உருவாக்கி, அதை அந்த தாடை எலும்பிலிருந்த கடைவாய்ப் பல் போல தோன்றும்படி தேய்த்து உருமாற்றினர்; **(g)** அந்த போலியான மண்டையோட்டு எலும்பையும்,

போலியான கடைவாய்ப்பல் மற்றும் புதைப்படிவமாக்கப்பட்ட மண்டையோட்டு எலும்புத்துண்டையும் சரளைக் கல் குழியில் காணப்படும்படி செய்து, அந்த நிலையில் சார்லஸ் டாவ்ஸன் மற்றும் Dr. ஸ்மித்வுட்வார்டு இருவரும், அவையெல்லாம் உண்மையான புதைவடிவங்களாயிருந்ததாக நம்பும்படிச் செய்யப்பட்டன. இந்த குற்றச்சாட்டுகள், மிக உயர்ந்த விஞ்ஞானப்பூர்வ நிலைப்பாட்டிலிருந்த மனுஷரால் செய்யப்பட்டன. பிரிட்டிஷ் மியூசியத்தைச் சேர்ந்த Dr.K.P. ஓக்லே மற்றும் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களாயிருந்த Dr.W.E. லீக்ராஸ்கிளார்க் மற்றும் Dr.J.E. வெய்னர் ஆகியோர் உட்பட அநேக திறமை வாய்ந்த விஞ்ஞானிகள் அந்த மண்டையோடு முதலில் உருவாக்கப்பட்ட போது, அதன் "மறுஉருவாக்கத்தின்" சரியான தன்மையை சவாலிட்டு அந்த தாடை எலும்பு ஒரு மனிதக் குரங்கு அல்லது சிம்பான்ஸியுடையது என்று வலியுறுத்தினர், ஆனால் அவர்களுடைய எதிர்ப்புகள் பொருட்படுத்தப்படவில்லை.

ஹைடெல்பெர்க் மற்றும் நியாண்டெர்தால் மனுஷரைப் பொறுத்தவரை, இறந்துவிட்ட மனுஷருடைய எலும்புகள், பூமியின் ரசாயன செயல்பாட்டால் உருக்குலைந்திருப்பதை விட்டுவிட்டாலும், அவர்களுடைய மீதியான கொஞ்சம் எலும்புகள் இப்போது ஜீவிக்கிற அநேக மனுஷர்களில் காணப்படக் கூடியதைக் காட்டிலும் குறைந்த அளவிலேயே இயற்கைக்கு மாறானவற்றை காண்பிக்கின்றன. உண்மையில், அநேக திறமையுள்ள விஞ்ஞானிகள் முதலில் இருந்தே, இந்த கண்டு பிடிப்புகள் இயற்கைக்கு மாறான மனுஷர்களின் எலும்புகளாயிருந்தன என்று வலியுறுத்தி இருக்கின்றனர். மற்றவர்களுக்கிடையே பரிணாமவாதிகளில் சிலர் கூட இப்படியாகப் பற்றுதல் காட்டவில்லை, இருந்தும் அப்படிப்பட்ட பலவீனமான ஏமாற்றுதல்களில் ஒரு பகுதி ஆதாரமாக, மேலோட்டமாக சிந்திக்கிற பரிணாமவாதிகள் மனிதக்குரங்குகளிலிருந்து (apes) மரபுவழி வந்தவன் மனிதன் என்பது விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டது என்று வலியுறுத்தி வருகின்றனர்!

## பரிணாமவாதிகளுடைய சொந்த சாட்சி

பரிணாமவாதிகளின் சில சாட்சிகளே "கிடைக்காமல்போன தொடர்புகள்" என்பதாக சொல்லப்படுவதின் வலியுறுத்தல்களை அங்கீகரியாமல் இங்கே பொருத்தமான நிலையில் இருப்பதால் அவற்றை நாங்கள் மேற்கோள்காட்டுவோம். பேராசிரியர் வாஸ்மேன் சொல்லுகிறார்: "அங்கே மனித குரங்குகளின் புதையுண்ட படிவங்கள் எண்ணற்றவைகள் இருக்கின்றன." அவற்றில் மீதியானவை இயோசின் (EOCENE) முதல் அலுவியல் (வண்டல் சார்ந்த) யுகத்திற்கு (alluvial epoch) அண்மையான பல்வேறு மண் அடுக்குப் படிவங்களில் புதையுண்டு கிடக்கின்றன. ஆனால் அவற்றில் புனைவு செய்யப்பட்ட முன்னோர்களின் வடிவங்களுக்கும் தற்காலத்திய மனுஷனுக்கும் இடையே ஒரு தொடர்பு கூட இருந்ததாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. மனுஷனுடைய புனைவு செய்யப்பட்ட முழு வம்சாவளி ஒரேயொரு புதை படிமத்தின் உயிரினத்தாலோ அல்லது ஒரேயொரு புதை படிமத்தின் உயிரினப்பிரிவாலோ ஆதரவளிக்கப்படவில்லை. "நாம் விளக்கத்தைக் காண முற்காலத்திலிருந்து தற்காலம் வரை மரபு வழியில் முயற்சித்தால் ஒரு இனப்பிரிவு மாற்றமடைந்ததாக நாம் நிரூபிக்க முடியாது" என்று டார்வின் கூறுகிறார். H.G. வெல்ஸ் மிகுந்த கற்பனையில் ஈடுபாடு கொண்ட பரிணாமவாதி தன்னுடைய வரலாற்றில் பக்கம் 69-ல் ஒப்புக் கொள்வதாவது: "பித்தேக்கான்த்ரோபோஸ் (குரங்கு மனிதன்) மனுஷனுடைய நேரடியான மூதாதையர் என்று நாம் சொல்லமுடியாது": பக்கம் 116-ல் அவர் "கிடைக்காமல்போன தொடர்புகள்" என்று சொல்லப்படுகிற நான்கில் ஒன்றுமே மனுக்குலத்தின் மூதாதையராக இருந்திருக்க முடியாது என்று காட்டுகிற ஒரு வரைபடத்தைக் கொடுக்கிறார், ஏனெனில் அந்த ஒன்று, அவனுடைய இனத்தின் கடைசியாயிருக்கும். அதனால் அதன் வழி வந்த மரபுத்தோன்றல்களைப் பெற்றிருக்கவில்லை.

Dr. ஆஸ்பார்ன் என்கிற இன்னொரு புகழ்பெற்ற பரிணாமவாதி - ஹைடல்பெர்க் மனிதன் "மனுஷனுக்கும், மனிதக் குரங்குக்குமிடையே இடைப்பட்ட ஒரு ஜீவி இருந்ததாக எந்த அடையாளமும் காட்டவில்லை என்று கூறுகிறார்." மீண்டும் நியாண்டர்தால்களின் பற்களைப் பற்றி பேசுகையில் அவர், "இந்த விசேஷமான அம்சம் மட்டுமே மனித குலத்தின் முன்னோர்களிடமிருந்து நியாண்டர்தால்களை விலக்கி விடும்" என்று சொல்லுகிறார். பேராசிரியர். கோப், மிகப்பெரிய உடற் கூறு இயல் வல்லுநர் சொல்கிறார்: அந்த (பித்தேகான்த்ரோபோஸ்) தொடை எலும்பு ஒரு மனுஷனுடையதாயிருந்தது; இது எந்த வகையிலும் ஒரு தொடர்புண்டாக்கும் இணைப்பாக (connecting link) இருக்கவில்லை. Dr. ஆர்ச்சர்ட் அறிவிக்கையில், இந்த கருத்து பற்றி சொல்லப்பட்ட மீதியானவைகள் [இந்த நான்கு போலிகள்] மிகவும் கொஞ்சமானவையாகக் கண்டுபிடிக்கப்பட்டன; மேலும் அவற்றின் முக்கியத்துவம் - அந்த இரண்டின் காலம் மற்றும் அவை மனுஷனுடையதா அல்லது மிருகத்தினுடையதா அல்லது முழுமையாக [மனித] இயற்கைக்கு மாறானதா என்று அந்த விஞ்ஞானிகளாலேயே சூடாக விவாதிக்கப்படுகிறது என்று அறிவிக்கிறார். ஜியாலாஜிக்கல் அன்ட் பேலியன்தாலாஜிக்கல் இன்ஸ்ட்டிடியூட், பெர்லின் யூனிவர்சிட்டி - பேராசிரியர், பிரான்கோ, "மனிதன் திடீரென நான்காம் நிலை காலப் பகுதியில்குவார்ட்டர்னரி பிரியட் -தற்போதைய ஜியாலாஜிக்கல் யுகம் தோன்றுகிறான். இந்த ஆய்வுக்குரிய செய்தியைக் குறித்து பேலியன்டாலாஜி - புதைப்படிம இயல், நமக்கு ஒன்றும் சொல்லவில்லை." மனுஷனுடைய மூதாதையர் பற்றி இது ஒன்றும் அறியவில்லை" என்று உறுதிப்படுத்துகிறார். இந்த குறிப்புகளுடன் நாம் இந்த நான்கு போலிகளையும், தங்களைப் புத்திமான்களென்று எண்ணுகிறவர்கள் முட்டாளாக்கப்பட விரும்புகையில், அவர்களுடைய ஏமாளித்தனத்திற்கு நாங்கள் விட்டு விடுகிறோம். டக்ளஸ் டீவார் F.Z.S (Douglas. Dewar F.Z.S) இந்த

கருத்தைக் குறித்து உலக விஞ்ஞான ஆய்வில் (World Science Review) இதனைப் பற்றி எழுதும்போது, "மொத்த உருமாதிரியுமே திரிக்கப்பட்ட ஒன்றாக மிக உயர்ந்த நிலையில் சர்ச்சைக்குரிய ஆதாரமாய் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

## குகை ஓவியங்களில் எந்த ஆதாரமும் இல்லை

பரிணாமவாதிகள் இன்னொரு மிகவும் வலிமையற்ற விவாதத்தை கொடுப்பதை இங்கே காணலாம்: சில குறிப்பிட்ட ஆழமான இருட்டான குகைகளில், குறிப்பிடும்படியாக ஸ்பெயினிலுள்ள அடமிராவில் பல்வேறு விலங்குகளின் வண்ண ஓவியங்களும், சுவரில் வரையப்பட்ட சித்திரங்களும் இருக்கின்றன. அவற்றில் சில இப்போது இல்லை. இந்த சித்திரங்கள் 25000 முதல் 50000 ஆண்டுகள் பழமைவாய்ந்தவை என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால் அவர்களுடைய சொந்த அறிக்கையின்படி, அவர்களுடைய குரங்கு மனுஷர் காலத்தில் நெருப்பு, தீப்பந்தங்கள் மெழுகுவர்த்திகள், முதலானவை அறியப்படவில்லை. அப்போது இம்மாதிரியான ஓவியங்கள் இருட்டிலேயே வண்ணந்தீட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட இருட்டில், விலங்குகளின் நல்ல தோற்றங்களை அப்படியே பிரதியாக்கக் கூடிய எந்த ஓவியத்தையும் யார் செய்திருக்க முடியும்? நிச்சயமாக குரங்கு மனிதர்கள் அல்ல! குரங்கு மனிதர்கள் எப்படி இந்த ஓவியங்களில் தோற்றமளிக்கிற பழுப்பு நிறம், சிவப்பு, கறுப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை நிறங்களை உருவாக்க போதுமான அளவு வண்ணக் கலவையை கலந்திட அறிந்திருப்பார்கள்? எப்படி இந்த குரங்கு மனிதர்கள், இந்த ஓவியங்களை வரைய அவசியமான ஏணிகளையும், சாரங்கட்டுதல்களையும் உருவாக்கியிருக்க முடியும்? எப்படி அந்த வண்ணங்கள் அந்த ஈரமான குகைகளில் 25000 முதல் 50000 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அதுபோல் தெளிவாக இருந்திருக்க முடியும்? இந்த மறுப்புரைகள் அந்த குரங்குமனிதர்கள் இப்படிப்பட்ட ஓவியங்களை வரைந்தார்கள் என்ற கொள்கைக்கு முடிவு கட்டுகிறது. மேலும் ஏதோ ஒரு நவீன கலைஞர் நவீன உபகரணத்தைப் பயன்படுத்தி தன்னுடைய கற்பனையை வரைந்தார் என்பது கலைத்துறையில் அனுமதிக்கப்படுகிற ஒன்று விஞ்ஞானத்தில் அனுமதிக்கப்படுவதில்லை, என்றாலும் அப்படியாக அது அதனை வரைந்திருக்கிற ஒருவரை சுட்டிக் காட்டவில்லையா? இப்படிப்பட்ட சான்றளிக்காத விவாதங்களுக்கு திரும்புகிற இந்த கொள்கை எவ்வளவுக்கு உண்மையான சான்றுகள் குறைவுபடுவதாக இருக்க வேண்டும்!

## குறிப்பிடப்பட்ட சான்றடையாள உடலுறுப்புகளில் எந்த ஆதாரமுமில்லை

பரிணாமவாதிகள் மனுஷ சாரீரத்திலுள்ள குறிப்பிடப்பட்ட சான்றடையாள உடலுறுப்புகள் சிலவற்றை – அவை மனுஷனல்லாத மூதாதையரிடமிருந்து மரபுவழி வந்தவை என்பதற்கான சான்றுகள் என்றும், அவை எந்த பயனும் கொண்டதாக இல்லை என்றும் வாதிடுகிறார்கள். அவர்களுக்கு விருப்பமான சான்றடையாளத்துக்குரிய உறுப்பு (அப்பன்டிக்ஸ்) குடல்வால். இது மனிதன் ஏதோ ஒரு விலங்கின் மரபுவழி வந்தவன் என்று நிரூபிப்பதாகவும், அந்த விலங்கில் இவ்வுறுப்பு ஏதோ பயன்பாட்டில் இருந்தது என்றும் வலியுறுத்துகின்றனர்; ஆனால் (அது தேவைப்பட்ட முன்னோர்களிடமிருந்து மரபு வழியில் பரிணாமவாதி வந்தான் என்பதை நிரூபிக்க முயற்சிக்க அது அவனுக்குத் தேவைப்படுகிறதே தவிர) இது மனுஷனுக்கு உபயோகமாக இல்லை என்றும் கோருகின்றனர். ஆனால் மருத்துவ விஞ்ஞானமும், அறுவை சிகிச்சையும் முன்னேற்றமடைந்திருப்பதால், அவர்கள் அப்பன்டிக்ஸீக்கான ஒரு உபயோகத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சிறந்த மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் முழுமையான பரிசோதனைக்குப் பின்பு தங்கள் அப்பன்டிக்ஸை இழந்தவர்கள் மலச்சிக்கலினால் கஷ்டப்படுகிறார்கள் என்பதைக் கண்டறிந்து இந்த குடல்வால் பெருங்குடலின் துவக்கத்தில் கழிவுகளை நீக்கும் வேலையில் உதவிபுரிந்து அவ்வாறாக மலச்சிக்கலைத் தடுக்கும் வேலையைச் செய்கிறது என்ற முடிவுக்கு வந்தனர். இங்கே நிச்சயமாகவே இந்த "சான்றடையாள உடலுறுப்பு" என்று அழைக்கப்படுவதன் சுவாரஸ்யமான பயன்பாடு கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது; அதுவும் பரிணாமவாதிகளின் சந்தோஷமின்மைக்காகும். அவர்கள் விலங்குகளை தங்கள் சொந்தங்களாக நிரூபிக்க எப்போதும் ஆவலோடு இருக்கிறார்கள் - குறைந்தது இந்த விஷயத்தில் அவர்கள் மனம் சார்ந்த தங்கள் உறவுமுறையை ஒரு கழுதையுடனாவது தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அப்பன்டிக்ஸ் மீதான இந்த வாக்குவாதம் ஏதேனும் மதிப்பை கொண்டிருக்குமானால், குரங்கிலிருந்து அல்லாமல், அதற்கு மாறாக, எலியிலிருந்து நம்முடைய மரபு வழி வந்திருக்க சாதகமாக இருக்கும். ஏனெனில் பிந்தினது விகித அளவின்படி ஒரு பெரிய அப்பன்டிக்ஸைக் கொண்டுள்ளது.

## இரத்தப் பரிசோதனைகள் பரிணாமத்திற்கான ஆதாரம் அல்ல

இரத்த பரிசோதனைகள் பரிணாமவாதிகள் தங்கள் கொள்கையை வலியுறுத்தி வாதிட இன்னொரு ஆதாரமாயிருக்கின்றன. அவர்கள் இந்த விவாதத்தை இப்படி வைக்கின்றனர்: நாயின் இரத்தத்தை ஒரு குதிரைக்குள் செலுத்தும் போது அது அந்த குதிரையைக் கொல்லுகிறது; ஆனால் மனுஷனுடைய இரத்தம் மனித குரங்குக்குள் செலுத்தப்படும் போது, மிகக் கொஞ்ச அளவே பாதிப்பை உண்டாக்குகிறது. எனவே அவர்கள் நாயும், குதிரையும் நெருக்கமான தொடர்புடையவை அல்ல, அதே சமயம் மனிதன் மனிதகுரங்குக்கு நெருக்கமான தொடர்புடையவன் என்று விவாதம் செய்கிறார்கள். அதற்கு பதிலாக நாங்கள் சொல்வது: நாயின் இரத்தம் ஏராளமான விலங்குகளுக்கு விஷமாய் இருக்கிறது; அதே சமயத்தில் செம்மறியாடு,

வெள்ளாடு மற்றும் குதிரை ஆகியவற்றின் இரத்தமும், இரத்த நிணநீரும் (Serum) மற்ற விலங்குகளுக்கும், மனிதருக்கும் நச்சுத்தன்மை உடையவை அல்ல. எனவே இரத்த நிணநீர்கள் பொதுவாக இந்த விலங்குகளிடமிருந்து தான், பிரத்தியேகமாக குதிரையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஆனால் மனித குரங்குகளிலிருந்து மனுஷருக்கான இரத்த நிணநீர் இதுவரை தயாரிக்கப்படவில்லை, ஏனெனில் அவை மனிதருக்கு உதவியாக இல்லை. இந்த உண்மைகள் அந்த பரிசோதனையின் கீழான விவாதம் உண்மையாயிருக்கு-மெனில் மனிதன் மனிதகுரங்கைக் காட்டிலும் செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் குதிரைக்கு அதிக நெருக்கமான தொடர்புடையவனாயிருப்பதை நிரூபிக்கும்.

## வழிமுறைத் தொகுப்புக் கொள்கை (உயிர்வழித் தோற்ற விதி)

(The Recapitulation Theory)

பரிணாமம் வழிமுறைத் தொகுப்புக் கொள்கை என்று அழைக்கப்படும் ஒரு கோட்பாட்டை கண்டுபிடித்துள்ளது. அதன்படி பரிணாமவாதிகள் வலியுறுத்துவது என்னவெனில் மனித கரு உயிர் அதன் முதல் ஒரு சில வாரங்களின் போது, கீழ்நிலை இனப்பிரிவுகளின் எல்லா கட்டங்களினூடாகவும் கடந்து செல்கிறது, அதாவது பரிணாமத்தின் மொத்த சரித்திரமும், மனித கருவில் வளரும் உயிரின் ஒரு சில வாரங்களில் குறித்த முறையில் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்-படுகிறது. ஆயிரக்கணக்கான விலங்கின இனப்பிரிவுகளில் சொல்லப்படுகிற மாற்றங்கள் எல்லாம் சொற்ப வாரங்களுக்-குள்ளாக எப்படி குறித்த முறையில் கும்பலாகக் கூட்டப்-பட்டிருக்க முடியும்? என்று நாம் கேட்கலாம். உடல்ரீதியாக இது சாத்தியமாகாது, மீண்டும் பரிணாமவாதத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் சுற்றுச் சூழலுக்கு ஏற்ற-தாயிருக்கையில், அவற்றை உருவாக்க அதே சுற்றுச் சுழலைக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் - இது ஒரு கருவின் சுற்றுப்புற சூழலில் சாத்தியமில்லாத காரியமாகும்.

மனித கருவில் பிறவிலங்குகளுக்குரிய எப்படிப்பட்ட சாயல் இருப்பினும், அது ஞானமுள்ள சிருஷ்டிகர் எல்லா பாலூட்டிகளிலும் (mammals) ஒரே மாதிரியான அடிப்படை அமைப்பை பயன்படுத்தியிருக்கிறார் என்ற உண்மையின் காரணமாகவே தான். அது அப்படியே எல்லா கரு/ உயிருக்குரிய ஆரம்பகால கட்டத்தில் தோன்றியாக வேண்டும்; அப்படியான இனப்பிரிவுகளில் வேறுபாடு காரணமாக வரும் வித்தியாசங்கள் பின்னாளில் அதாவது அடிப்படை பாலூட்டி அமைப்பு வளர்ச்சியடைந்த பிறகு ஏற்பட வேண்டும். நிச்சயமாகவே ஒரு கண்டுபிடிப்பாளர் ஒரே மாதிரியான கண்டுபிடிப்புகளின் அடிப்படை பாகங்களை மிகவும் ஒத்ததாக ஏற்படுத்துவார். அப்படியே தேவனும் செய்தார். இந்த உண்மை மனித கரு/உயிரின் ஆரம்ப கால கட்டங்கள், மற்ற பாலூட்டிகளின் கரு/உயிர்களுக்கு ஒத்திருக்கும் நிலைப்பாட்டிலிருந்து பரிணாமத்தை சோதித்-தறிவதில் கிழக்குக்கும், மேற்குக்கும் உள்ள தூரத்தைப் போல் இருக்கிறது. இந்த ஒத்திருக்கும் தன்மையின் மத்தியில் உள்ள வித்தியாசத்தை நாம் எல்லா செயல்களிலும் காண்கிறோம் - எந்த இரண்டு இலைகளும் எவ்வளவு ஒப்புமை இருந்தாலும் துல்லியமாக ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அப்படியே இரண்டு மனித முகங்கள், இரண்டு மலைகள், இரண்டு மரங்கள் அல்லது வேறெந்த இரண்டு பொருளும் முற்றிலும் ஒரே மாதிரியாக இல்லை. பரிணாமத்தைப் போல, வழிமுறைத் தொகுப்புக் கொள்கை ஒரு சமயத்தில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போதோ திறமையுள்ள விஞ்ஞானிகளால் தீவிரமாக கேள்வி கேட்கப்பட்டு, அவர்களில் கொஞ்சம் பேரால் அது புறக்கணிக்கப்படாமலில்லை. மேற்குறிப்பிட்ட இந்த விளக்-கங்கள் எல்லாவித விலங்கினங்களிலுள்ள இனப்பிரிவு-களும் கருவில் குறிப்பிடப்பட்ட வழிமுறைத் தொகுப்பு தொகுத்-துரைப்பதன் மூலம். பரிணாமவாதம், தன்னை நிரூபிக்க முடியவில்லை என்பதை உறுதியாக எடுத்துக் காட்டுகிறது.

## "மூளையுகம்" என்று பொய்யாய் அழைக்கப்படுவது

பரிணாமவாதிகள் நம்முடைய நாளில் உள்ள அதிசயமான கண்டுபிடிப்புகளையும், அறிவு பெருக்கத்தை-யும் மனிதனில் செயல்படுகிற பரிணாமத்தின் ஒரு சான்றாக, அவனை உயர்ந்த ஜீவிக்குரிய தளங்களுக்கு எப்போதும் உயர்த்துவதாகவும் கூட சுட்டிக் காட்டுகின்றனர். மேலோட்ட-மாகச் சிந்திப்பவருக்கு இது பரிணாமவாதத்தை ஆதரிக்கிற வலுவான ஒரு ஆதாரமாகத் தோன்றக் கூடும். ஆனால் பரிசோதித்துப் பார்க்கையில் இந்த "ஆதாரம்" ஒன்று-மில்லாததாகி விடுகிறது. முதலாவது இடத்தில் அறிவுப் பெருக்கம் எந்த அளவில் பரவலாக இருந்தாலும் தனிப்பட்ட நபர்களான சிலர் மட்டுமே குறிப்பிடத்தக்க விதத்தில் உண்மையான கண்டுபிடிப்பாளராய் இருக்கிறார்கள். அதனால் பரிணாமவாதம் உண்மையாய் இருக்கு மென்றால், இப்போது ஜீவிக்கிற மனுக்குலத்தார் பொது நிலையில் மிகப் பெரிய கண்டுபிடிப்பாளர்களாகவும், சிந்தனையாளர்களாகவும் இருப்பார்கள். ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை; ஓவியம் வரைதல், சிற்பக்கலை, கட்டிடக்கலை, கவிதை, இசை, சொற்பொழிவு, அரசியல் பண்பு, தத்துவம். வரலாறு மற்றும் மதம் ஆகியவற்றின் மிகப் பெரிய படைப்புகள் நம்முடைய நாளைச் சார்ந்தவை அல்ல. ஆகவே நாம் முந்தின காலத்தைக் காட்டிலும் இப்போது மனிதர்கள் மிகுந்த திறமை வாய்ந்தவர்கள் என்பதை இவ்வாறாக மறுக்கிறோம்.

மேலும் அறிவுப் பெருக்கம் மற்றும் கண்டுபிடிப்பு-களை அவர்கள் பரிணாமத்தின் ஒரு ஆதாரமாக வலியுறுத்-துவதைக் குறித்து நாம் என்ன சொல்லலாம்? நாம் பதில் சொல்லும் விதமாக இந்த பெருக்கம் சடிதியாகவும், வேகமாகவும் இருப்பது, மிகவும் மெதுவாகச் செல்லுகிற பரிணாமத்தின் குறிப்பிட்ட வழிகளுக்கு மிகவும் முரணாகவும் இருப்பதால் "முடிவுகாலத்தில்" தேவன் இங்கே (தானி .12:9)

1799-ம் வருஷத்திலிருந்து மனுக்குலத்தாரை இரண்டு விதமான காரியங்களுக்காக ஆயத்தப்படுத்தும்படி அறிவுப் பெருக்கத்தை கொடுத்ததன் காரணமாகத்தான் இருக்க வேண்டும் : **(1)** சாத்தானுடைய ராஜ்யம் கவிழ்க்கப்படுதல் **(2)** பூமியின் மீது சீக்கிரமே ஸ்தாபிக்கப்படப் போகிற தேவனுடைய ராஜ்யத்திற்கான அத்தியாவசியத் தேவைகள், நம்முடைய நாளின் விசேஷித்த அறிவு ஒரு பாகமாக சாத்தானுடைய ராஜ்யத்தின் சிதைந்து கெட்டுப்போன அஸ்திபாரங்களை வெளிப்படுத்தி, மனுக்குலத்தார் அதன் தற்கால பூமிக்குரிய அந்தஸ்தை நீக்கிப் போட அவர்களுக்கு உதவிபுரியவும், மேலும் ஒரு பாகமாக இந்த அழிவை நிறைவேற்ற மனுக்குலத்தாருக்கு கருவிகளை அமைத்து கொடுக்கும் நோக்கத்திற்காகவும் திட்டமிடப்பட்டது. அதன்படி அநேக விசேஷமான கண்டுபிடிப்புகள் சமீபகாலத்தில் வந்திருக்கின்றன. நம்முடைய நாளின் ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகளும் கூட மனித சமுதாயத்தில் ஆயிரம் வருட யுக தேவைகள் மற்றும் முன்னேற்றத்திற்கான நிலைமைகளை, ஆயத்தப்படுத்தவும் தெய்வீக நோக்கமுடையவைகளாயிருக்கின்றன. இப்படிப்பட்ட காரணங்களுக்காக, நாம் அப்படிப்பட்ட அறிவுப் பெருக்கத்தையும், கண்டு பிடிப்புகளையும் பெற்றிருக்கிறோம்; அவை இந்த விதங்களில் மற்றெல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய நாட்களின் தனித்தன்மையை குறித்துக் காட்டுவதாக இருக்கின்றன. இயல்பாக முந்தினகால அறிவு உண்மையில், நம்முடைய தற்போதைய அறிவுக்கு அடிப்படையாக இருக்கிறது; ஏனெனில் முந்தின தலைமுறைகள் தங்கள் அறிவை அவர்களுக்கு அடுத்துவந்தவர்களுக்கு கையளித்துள்ளனர். இவ்வாறாக நாம் நம்முடைய அடிப்படை அறிவில் கடந்த கால தலைமுறையினரின் தோள்களின் மீது நிற்கிறோம். அச்சு இயந்திரம் 1440 AD-ல் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, இந்த நிலைமை இருந்து வருவதுடன், உலக சமுதாயத்திற்குள் இண்டர்நெட் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலமாக, முன்பு இதுவரை இல்லாத அளவுக்கு பரவலாக அறிவு பரவிச் செல்கிற புதிய யுகத்தின் காலகட்டத்தில் நாம் பிரவேசித்திருக்கிறோம்.

இந்த விசேஷமான அறிவுப் பெருக்கமும், நம்முடைய நாளின் அநேக கண்டுபிடிப்புகளும், பரிணாமவாதிகள் சொல்கிற வழியில் அதாவது பரிணாம செயல்கள் மெதுவாகவும், படிப்படியாகவும் நடக்கிறது போல வந்துவிடவில்லை, ஆனால் 1799-க்கு முந்தின மனித வரலாற்றின் வருடங்களில் எல்லாம் முன்னேற்றத்தின் விகிதத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில், மிகவும் தீடீரென்றும், வேகமாகவும் வந்திருக்கின்றன. 1799 முதற்கொண்டு, முதல் நீராவிப்படகு தொடங்கி, கண்டறிந்து கொள்ளுதலும் புதிய கண்டுபிடிப்புகளும் வரும் விகிதம் முன்னோக்கி வேகமாகச் சென்றதால் அறிவு அதிகரித்து வந்திருக்கிறது. ஆகையால் இந்த உண்மைகள் பரிணாமம் தவறென்று நிரூபிக்கின்றன; மேலும் "முடிவு காலத்தின்" ஆரம்பம் முதல் பூமியின் மீது தேவனுடைய ராஜ்யத்தின் தேவைகளுக்காகவும், சாத்தானுடைய சாம்ராஜ்யத்தின் அழிவுக்காகவும் ஆயத்தங்களாக அறிவைப் பெருக்கவும், கண்டுபிடிப்புகளைப் பன்மடங்காக்கவும் பிரத்தியேகமான வாய்ப்புகளைச் செயல்படுத்துகிற தெய்வீக செயலாக்கம் என்பதையும் நிரூபிக்கின்றன. (தானி. 8:17; 12:4). எனவே திறமைகள் பெருக்கமடையாமல் ஒருவனுடைய திறமைகளை உபயோகிக்கும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளது என்பதே நமது நாளின் அடையாளமாயிருக்கிறது; இது நிச்சயமாகவே பரிணாமவாதம் தவறென்று நிரூபிக்கிறது.

## Mendelism-மெண்டெலிசம் பரிணாமவாதத்தை நிராகரிக்கிறது

சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல அறிவியல் விஷயங்கள், அதாவது மெண்டலிசம், பரிணாமவாதத்தை தவறென்று நிரூபிக்கிறது. மெண்டெல் (Mendel) என்பவர் தாவரம் மற்றும் விலங்கு உயிரில் ஒரு பரந்த தொடர் சோதனைகள் மூலம் பல இயற்கை மரபுவழி விதிகளை நிரூபித்துள்ளார். இவற்றில் ஒன்று, ஒரு நேர் இயல்பு (ஆதிக்கம்) மற்றும் எதிர்இயல்பு (ஒடுங்கு தன்மை) தாவரம் அல்லது விலங்கின் முதல் மரபுவழி பிறப்பு, ஓங்கு/ஆதிக்க தன்மையுள்ள தாவரம் அல்லது விலங்கு பிறப்பு மூலத்தை பின் தொடர்ந்து வரும். ஆனால் எதிர் இயல்புள்ளதும் தோன்றுகிறது. மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறையில் இரண்டுமே சந்ததியில் சமமாகத் தோன்றுகிறது. ஒரு மிக உயரமான வகை பட்டாணி. ஒரு குட்டையான வகையுடன் கலப்பினம் செய்யப்பட்டால், விளைவு அனைத்தும் உயரமானவையாக இருக்கும்; இரண்டாம் தலைமுறையில் இரண்டு வகையும் தோன்றும், ஆனால் 3-க்கு 1 என்ற விகிதத்தில் மிக உயரமான வகை தோன்றும். மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறையில் அவை சராசரியாக சமமான எண்ணிக்கையில் இருக்கும். ஆனால் இந்த குட்டை இனம் சுயமாகக் கருவுற்றால் அடுத்தடுத்து வரும் அனைத்து மரபின உற்பத்தியும் குட்டை இனமாகவேயிருக்கும். பூக்கள், முயல்கள், பூனைகள், எலிகள், நாய்கள் போன்றவற்றுடன் செய்யப்பட்ட சோதனைகள் இதையே நிரூபித்தன. இந்த விதியை மனிதனுக்கும் குரங்குகளுக்கும் உபயோகித்தால் மனிதர்களிடையே சில தலைமுறைகளில் குரங்கு தோன்றும்படி செய்திருக்க வேண்டும். எனவே, சில மனிதர்கள் எதிர் இயல்பான மரபுக்கூறுகளில் குரங்குகளாக மாறியதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் அம்மாதிரி எதுவும் நிகழவில்லை. இது மனிதனில் குரங்கின் தடம் இல்லை என்பதையே காட்டுகிறது.


## கலப்பினங்கள் – பரிணாமவாதத்தை தவறென்று நிராகரிக்கின்றன

பரிணாமவாதம் உண்மையாக இருக்குமானால், ஒரு இனம் மற்றொன்றாக பரிணமித்தால், கலப்பினங்கள்

அதன் செயல்பாட்டிற்கு தவிர்க்க முடியாததாக இருக்கும். ஆனால் கலப்பினங்கள் மலட்டுத்தன்மை கொண்டவை என்று நன்கு அறியப்பட்டுள்ளன. இது பரிணாமத்துக்கு திட்டவட்டமாக முரண்படுகிறது ஒவ்வொன்றும் "**தங்கள், தங்கள் ஜாதியின்படியே**" பலுகிப்பெருக வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையானது கலப்பினங்களின் மலட்டுத் தன்மையின் மூலம் அதுவே இனப்பெருக்க விதியாக இருக்கிறதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, இயற்கை–யானது பரிணாமத்தை அதாவது பரிணாம சக்திகளை மற்ற ஆனால் தொடர்புள்ள அதற்கொப்பான இனங்களுடன் சேர்த்து இனப்பெருக்கம் செய்வதன் மூலம் பாதுகாக்கிறது என்ற அதன் ஒரே சாத்தியமான செயல்பாட்டின் பாதையில் அழித்து விடுகிறது. புதிய நிரந்தர இனங்களை உருவாக்க இனங்கள் மாறுவதில்லை அல்லது மற்றவைகளுடன் ஒன்றிணைவதில்லை; நாய்கள் மற்றும் பூனைகள் ஒன்றோடொன்று இனக்கலப்பு செய்து புதிய இனத்தை உருவாக்குவதில்லை. வெவ்வேறு இனங்களா அல்லது ஒரே இனத்தின் வகைகளா என்று நாம் அரிதாகவே அறியக் கூடிய மிக நெருங்கிய தொடர்புடைய ஒரே மாதிரியான ஆண் கழுதை மற்றும் பெண் குதிரை போன்றவை அடிக்கடி இனம் கலக்கும், ஆனால் அவற்றின் சந்ததி (குட்டி) மலட்டுத்–தன்மையுடையதாயிருக்கும். வரிக்குதிரை மற்றும் பெண்–குதிரை இரண்டும் கலந்து பிறந்த செபுலோன் (Zebulon) விஷயத்திலும் இது உண்மையாயிருக்கிறது. மற்ற நெருங்கிய தொடர்புடைய அனைத்து உயிரினங்கள் விஷயத்திலும் இது உண்மையாயிருக்கிறது. ஒரு மனிதனும், குரங்கும் சந்ததியை உருவாக்க முடியாது. அவை நெருங்கிய தொடர்புடைய இனங்கள் கூட இல்லை என்பதை இது நிரூபிக்கிறது. ஆனால் பரிணாமம் உண்மையாக இருந்–திருந்தால் இனப்பெருக்க வளமுள்ள சந்ததியின் உற்பத்தியுடன் நாம் அதிகமாக, ஒரே மாதிரியான கலப்பு இனப்பெருக்கத்தைப் பெற்றிருப்போம். டார்வினின் சொந்த சாட்சியத்தின்படி, தாவர கலப்பினங்கள் கூட நிரந்தர–மானவை அல்ல. இவை அனைத்தும் ஒவ்வொரு வகையும் அதன் சொந்த இனத்தைத் தவிர, வேறு எந்த இனத்தையும் பிறப்பிக்காது என்ற தேவனுடைய பிரமாணத்தை நிரூபிக்கிறது. ஆனால் இனங்கள் ஒன்றுக்கொன்று கலப்பினப்பெருக்கம் செய்து, நிரந்தரமான புதிய இனங்களை உருவாக்கினாலும், இது முற்றிலும் ஆதாரம் இல்லாத ஒரு விஷயமாயிருக்கிறது, கற்பனையை மிகவும் கட்டுப்பாடின்றி நீட்டினாலும், இனங்கள் (Genera) அவ்வாறு செய்ய முடியாது. இப்போதும் கூட பரிணாமவாதம் இந்த சாத்திய மற்றதை ஒப்புக் கொள்ள வேண்டும். நிச்சயமாக இது ஒரு நம்பிக்கையற்ற மற்றும் ஆதரவற்ற கொள்கையாகும். த ஸ்டாண்டர்டு சொல் அகாராதி (The Standard Dictionary) ஹைப்ரிடிசம் (கலப்பினம்) பற்றிய கட்டுரையில், "கலப்பினமானது, பரிணாம கொள்கையை பொதுவாக ஏற்றுக் கொள்வதற்கு எதிரான மிகப் பெரிய தடைகளில் ஒன்றாக இருக்கிறது" என்று சொல்லுகிறது.

## தேனீக்கள் மற்றும் எறும்புகள் பரிணாமத்தை தவறென நிரூபிக்கின்றன

மனிதக் குரங்குகள் என்று சொல்லப்படும் ஏப்ஸ்–களை (apes) விட சில பூச்சிகள் அதிக திறமையும் நடைமுறை திறனும் கொண்டவை என்பது பரிணாமவாதத்திற்கு எதிரான மற்றொரு வலுவான வாத ஆதாரமாகும். நாம் தேனீ மற்றும் எறும்பு போன்றவற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ள–லாம். இவை குரங்கைவிட மிக உயர்ந்த சமூக அமைப்பைக் கொண்டுள்ளன. அத்துடன் ஆக்கப்பூர்வமான திறன், அரசாங்கம் மற்றும் சமூக வாழ்வில் நிச்சயமாக மேம்–பட்டிருக்கின்றன. அவைகளிடம் படைகள், காவலர்கள், காவல் துறை, நீதிமன்றங்கள் (தண்டனைகளை விதிக்கும்) மற்றும் அத்தகைய தண்டனைகளை நிறைவேற்றுபவைகள் உள்ளன. ராஜாக்கள், ராணிகள், பிரபுக்கள், சாமானியர்–கள், உயர்நிலை மற்றும் கீழ்நிலை அடிமைகள் ஆகியோரைக் கொண்ட உயர்நிலையில் நிர்வகிக்கப்படும் சமூகத்தைக் கொண்டுள்ளன. தேனீ ஒரு அறுங்கோண பட்டகத்தின் வரிசைகளினூடே வடிவியல் ரீதியாக அமைக்கப்–பட்ட தேன் கூட்டின் கண்ணறையை உருவாக்குகிறது. இதனை கணித அறிவியல், நுண்கணிதம் ஆகியவை விஞ்ஞானத்துக்கு அறியப்பட்ட மிகவும் சிக்கனமான இடம் மற்றும் பொருள் சேமிப்பறை என்பதாக நிரூபிக்கின்றன. தேன் கூட்டின் ஒவ்வொரு கண்ணறையும் தனக்குள்ளே குறைபாடற்றதும் அதன் அருகிலுள்ள கண்ணறைகளுடன் பூரணமாக பொருந்தச் செய்யப்படுகிறது, ஓர் தேனீக்களின் கூட்டம் இருளில் கூட நேர்த்தியான திறமையுடன் இவற்றை உருவாக்குகிறது. பரிணாமவாதம் உண்மையாக இருக்கு–மானால், எப்போதும் அதிகரித்து வரும் முன்னேற்றத்தில் இந்த குணங்கள் ஏன் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்ததாகச் சொல்லப்படுகிற அவற்றின் இனங்களில் உருவாகும் சந்ததிக்கு மரபு வழி மூலமாக கொண்டு செல்லப்படவில்லை? மனிதக் குரங்கு தனது சமூக வாழ்விலும், செயல்பாடு–களிலும் தேனீயும், எறும்பும் அடைந்துள்ள உயர்வு நிலையின் அளவை அணுக முடியவில்லை? எனினும் பரிணாமம் உண்மையாக இருந்திருக்குமானால், தேனீ மற்றும் எறும்பைக் காட்டிலும் நீண்ட காலத்துக்கு பின்பு உருவான இனமாக மனித குரங்கு குறிப்பிடப்படுவதால், அது குறைந்தபட்சம் இவற்றை விட மிக அதிகமாக – மனிதன் மனித குரங்கை விட மிகவும் வளர்ச்சியடைந்திருப்பதற்கு ஒப்பாக வளர்ச்சியடைந்–திருக்க வேண்டுமே. மேலும் தேனீக்கள் மற்றும் எறும்பு–களுக்கு வேலை செய்யும் திறன் போன்றவை பெற்–றோரிடம் இருந்து பரம்பரை–யாக வருவதில்லை. ஏனெனில் வேலைக்கார தேனீக்கள் அனைத்தும் மலட்டுத்தன்மையுள்ளவை.



சோம்பேறி ஆண் தேனீக்கள் அவற்றின் தகப்பன்மார்– களாகவும், ராணி தேனீக்கள் முட்டைகளை இடுவதுடன் சரி, வேலை செய்யாமல் தாய்மார்களாக மட்டும் இருக்கின்றன. அதனால் இங்கே வளர்ச்சியடைவது பற்றிய ஒரு உண்மை, முற்றிலும் பரிணாமவாதத்திற்கு அப்பாற்பட்டது. அது குறித்து திருப்திகரமான விளக்கத்தை பரிணாமவாதம் அளிக்க முடியாது. சிருஷ்டிப்பு – என்பதே இந்த விஷயத்திற்கு ஒரே தீர்வாக இருக்கிறது. தேனீக்களுக்கும், எறும்புகளுக்கும் தேவன் கீழ்நிலையிலிருக்கும் விலங்குகளுக்குக் கூட இல்லாத மற்றும் இடைப்பட்ட உயிரினங்களில் காணப்படாத மிக உயர்ந்த திறன்களை வரமாகக் கொடுத்திருக்கிறார். அதே சமயம் பரிணாமவாதம் உண்மையாக இருந்தால், குறிப்பிடப்பட்ட பிற்கால உயிரினங்கள் அனைத்தும் பெருகிய முறையில் சிறந்து விளங்கும் தேனீ மற்றும் எறும்பை விட இந்த விஷயங்களில் மனிதனைத் தவிர, அவற்றிலும் முதன்மை நிலை அடைந்திருக்க வேண்டும். அவை அப்படி அடையவில்லை.

## பரிணாமவாதம் வேதாகமத்துக்கு முரணானது

ஆதியாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள மனுஷ சிருஷ்டிப்பின் வேதாகம அறிக்கை சொல்கிறபடி, மனிதன் ஒரு நுண்ணுயிரியாகவோ (microbe) அல்லது புரோட்டோ பிளாசமாகவோ சிருஷ்டிக்கப்படவில்லை; அல்லது ஒரு படி குரங்கிலிருந்து இடைவெளி உள்ளவனாகவும் இல்லை, ஆனால், "**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்.**" (ஆதி. 1:27). மனிதன் தேவனுடைய மனம், சன்மார்க்கம், மதம் சம்பந்தமான சாயலில் சிருஷ்டிக்கப்– பட்டான் (தேவனுடைய சரீரப்பிரகாரமான சாயலல்ல, ஏனெனில் தேவன் ஆவிஜீவியாயிருக்கிறார். அதே சமயம் மனுஷன் மற்றொரு இயல்புடையவன், அதாவது மனுஷீக – மாம்சத்துக்குரிய, பூமிக்குரியவன் ) மனுஷனுடைய ஆதி பூரணம், பிற அநேக வேதாகம வாக்கியங்களால் தாங்கப்படுகிறது. இந்த பின்னனியிலிருந்து (வசனம் 31) நாம் கற்றுக் கொள்வது, தேவன் தம்முடைய சிருஷ்டியை அங்கீகாரத்துடன் நோக்கிப் பார்த்து அவனை "**மிகவும் நன்றாயிருந்தது**" என்று அறிவித்தார்; உபாகமம் 32:4– லிருந்து, தேவனைக் குறித்து "**அவர் கிரியை உத்தமமானது**" என்பதால் அவர் நுட்பமான செயல் திறனுள்ள தனிச் சிறப்பு வாய்ந்தவர் என்று கற்றுக் கொள்கிறோம்; சங். 8:5–8–ல் நாம், "**நீர் அவனை** [மனுஷனாகிய ஆதாம்] **தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர், மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்,** [அவனது மனம், சன்மார்க்கம் மற்றும் மதப் பண்புகளில் அவனுடைய சிருஷ்டிகரின் சாயலுடையவனாயிருந்தான்] **உம்முடைய கரத்தின் கிரியை– களின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும், அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்– லாவற்றையும், காட்டு மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்ககிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர்.**" பிர. 7:29–ல் நாம் "**இதோ தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்**" என்று வாசிக்கிறோம். மேலும் லூக். 3:38–ல் நாம் "**ஆதாம் தேவனுடைய குமாரன்**" என்று வாசிக்கிறோம். (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்).

ஆனால், பரிணாமவாதம், அதன் நாத்திக மற்றும் டார்வினிய வடிவங்கள் இரண்டிலும், இந்த வேதாகம சாட்சியை திட்டவட்டமாக மறுக்கிறது – மனுஷன் ஆதியில் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் தன்னுடைய – சரீரம், மனம், சன்மார்க்கம் மற்றும் மதம்சம்பந்தமான அம்சங்– களில் எல்லா ஆற்றல்களிலும் பூரணமாக சிருஷ்டிக்கப்– பட்டான் என்பதை மறுக்கிறது. இந்த மறுப்பு உண்மையில் தன்னுடன், ஒரு பூரணமான நிலையில் மனுஷனுடைய ஜீவனுக்கான பரீட்சையை மறுதலித்தலையும், அந்த பூரணமான நிலையிலிருந்து பாவத்துக்குள்ளாகவும், மரணத்துக்குள்ளாகவும், சரீரம், மனம், சன்மார்க்கம் மற்றம் மதம் சம்பந்தமான நடைமுறையில் விழுந்து போனதை மறுதலித்தலையும் கொண்டு வருகிறது. எப்படி பரிணாம– வாதிகளால் இந்த வேதாகம போதனைகளை மறுதலிக்க முடிந்தது? எனில் (ரோம. 5:12–20; 8:18–21; 1 கொரி. 15:21,22) எனினும் அவர்கள் (அவர்களின் மத்தியில் சிலர் மத குருக்கள்!) இந்த கருத்தின் மீதான தங்களுடைய நம்பிக்கையை இந்த வழியில் வெளிப்படுத்துகின்றனர்; "மனிதன் விழுந்தானானால், அவன் மேல் நோக்கி விழுந்தான்", மேல் நோக்கி விழுவதின் சாத்தியமற்ற நிலை, அப்படிப்பட்ட குறிப்பிடும்படியான விழுதலின் முட்டாள்– தனத்தைக் காட்டுவதுடன் அப்படிப்பட்ட எண்ணத்தை எடுத்துக் கூறுகிற பரிணாமவாதிகளின் தெளிவற்ற சிந்தனையை வெளிப்படுத்துகிறது. பூரணத்திலிருந்து பாவம் மற்றும் மரணத்துக்குள்ளாக மனுஷன் விழுந்ததை மறுத்த நிலையில் அவசியத்துக்கு அவர்கள் மனிதனுடைய வீழ்ச்சிக்கான வேதாகமத்தின் விஷமுறிவு மருந்தை மீட்கும் பொருள் மற்றும் அதன் விளைவான திரும்பக் கொடுத்தலை மறுக்க வேண்டும். (அப். 3:19–21; யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு, அத்தியாயம் IX பார்க்கவும். குறிப்பாக "திரும்ப கொடுத்தலும் பரிணாம வாதமும்" என்ற பாகம் (பக்கங்– கள் 178–191) . எனவே நிச்சயமாக, "**உலகத் தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய**" "**வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் திரும்பக் கொடுக்கப்படும் காலங்கள் வருமளவும்**" என்று கூறப்– பட்டுள்ளது. எனவே நிச்சயமாக பரிணாமவாதமானது, தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளுக்கு வலிந்து பலவந்தமாக செய்யப்பட்ட எதிர்ப்பாக இருக்கிறது. இந்த கேள்வியில் நடுநிலை இல்லை. இந்த கருத்தின் மீதான வேதவாக்கியங்– களுடன் ஒத்திசைவில் எல்லாரும் விரைவாக நேர்மறையாக தீர்மானிப்பது, அவர்களுக்கு மிக நல்லது என்பதால் – நாம் எல்லாரும் தேவனே சத்தியபரர் என்று சொல்வோமாக ஆயினும் அது ஒவ்வொரு மனுஷனையும் பொய்யன் என்றும் ஆக்குகிறது. (ரோம. 3:4).

முதல் மனிதன் குரங்கிலிருந்து ஒருபடி இடைவெளி உள்ளவனாயிருந்தான் என்பதனால் எப்படி ஒரு பூரண மனுஷனாகிய இயேசு - அவனுக்கான மீட்கும் பொருளாக ஆக முடியும்? நம்முடைய இனத்தில் மிகுதியாக சீர்கெட்டுப் போனதும் கூட, குரங்கிலிருந்து அதன் பரிணாம வளர்ச்சி என்று உத்தேசமாகப் புனையப்பட்டதிலிருந்து, ஒரு குரங்கு மனிதனுக்கான சரிநிகர் விலைக்கிரயத்துக்கும் அதிகமான-தாக இருக்கும். ஆயினும் அப்படியாக சீர்கெட்ட ஜீவியை ஜீவனுக்கான பரீட்சையில் நீதியுடன் உட்படுத்தப்பட முடியாது. எனவே நீதியின் படி மீட்கும் பொருள் அவனுக்கு அவசியப்-படாதிருந்திருக்கும். எனவே, திரும்பக் கொடுத்தல் என்பது மனுக்குலத்தாருக்கு சொல்லி முடியாத சாபமாயிருக்கும்; ஏனெனில் அது ஆதியிலிருந்த மேன்மைக்கு திரும்பி வருதலை அர்த்தப்படுத்துகிறது. அதாவது பரிணாமம் மூலமாக குரங்கு மனிதனின் நிலைக்கு வருவதாகும்; அதே சமயம் வேதாகமம் திரும்ப கொடுத்தலை மனுக்குலம் மனுஷீக பூரணத்துக்கு திரும்பி வருவதற்கான நம்பிக்கை-யாக பற்றிக் கொண்டிருக்கிறது. (அப். 3:19-21).

வேதாகமத்தைப் பொறுத்தவரை, பரிணாமவாதிக்கு அது ஆவியினால் ஏவப்பட்ட வெளிப்படுத்தலாக இருப்ப-தற்கு பதிலாக, பெருமளவில் இது குரங்கு மனிதனிடமிருந்து அதிக தூரமாக இடைவெளியில்லாத மனிதனுடைய உற்பத்தி பொருளாயிருக்கிறது. மேலும், இந்த "மூளை யுகத்தின்" பரிணாம வளர்ச்சியின் தேவைகளை சந்திக்கக் கூடியதாயிருப்பதிலிருந்து தூரத்திலிருக்கிறது. உண்மையில் பரிணாமவாதிகள் தங்களுடைய இலக்கிய படைப்புகளை மத சம்பந்தமாக வேதாகமத்துக்கும் மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்து நோக்குகின்றனர். யுகங்களைப் பற்றி தெய்வீக ஏற்பாட்டுக்கு பதிலாக பரிணாமவாதம் அவர்களுக்கு இயற்கையின் திட்டமே இல்லாத எதிர்பாராத நிகழ்வாகவும், திரு.டார்வினுடைய புத்தகங்கள் அவர்களுக்கு வேதாகம-மாகவும் மாறி வருகிறது. அவர் இதனை கண்டுணர்ந்து கொண்டார் என்பதை, பின்வரும் அவருடைய நினைவூட்டும் வார்த்தைகள் நிரூபிக்கின்றன. "நான் வடிவமைக்கப்பட முடியாத யோசனைகள் கொண்ட ஒரு வாலிபனாக இருந்தேன். நான் எல்லாவற்றின் மீதும் எல்லா சமயங்-களிலும் அதிசயித்து, கேள்விகளையும், ஆலோசனை-களையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தேன்; மேலும் நான் திகைத்து ஆச்சரியப்படும் விதமாக. அந்த கருத்துகள் காட்டுத்தீ போலாகி, மேலும் ஜனங்கள் அதிலிருந்து ஒரு மதத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்." அப்படியானால் இங்கே நமக்கு உண்மையான விடை இருக்கிறது. மனுஷனுடைய சிருஷ்டிப்பு பற்றிய வேதாகம விளக்கத்தை அவர்கள் புறக்கணித்து விட்டு மாற்றாக டார்வினின் கொள்கையை வைத்துக் கொண்டார்கள்.

வேதாகமத்தில் உண்மையில் விசுவாசம் வைத்-திருக்கிற எவரும், மனித குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்று போதிக்கிற பரிணாமவாதிகளுடன் ஒத்துப் போக முடியாது. அவர்கள் வேதாகமத்தையும், அதில் விவரிக்கப்பட்டுள்ள தெய்வீகதிட்டத்தையும், அதன் ஆக்கியோனாகிய சர்வவல்லமையுள்ள தேவனையும் கூட புறக்கணித்துத் தள்ளுவது என்பது கிறிஸ்தவனுக்கு, பரிணாமவாதத்திற்கு எதிரான மிகப்பெரிய விவாதமாக இருப்பதுடன், அதில் உறுதியாக இருப்பதற்கென அவன் பரிணாமவாதத்தைப் புறக்கணித்தே ஆக வேண்டும்.

## ஓர் முறைப்படியான குற்றச்சாட்டு

பரிணாமவாதம் பற்றிய நம்முடைய விவாதத்தை, அதைப் பற்றிய ஒரு முறைப்படியான குற்றச்சாட்டு இல்லாமல் மனுஷன் கீழான விலங்குகளிலிருந்து தோன்றினான் என்று சொல்கிற கொள்கை என்பதாக நாம் முடித்து விடக் கூடாது. அது தன்னுடைய பொதுவான உடன்பாட்டை "அறிவாளிகள்" மத்தியில் கொண்டிருக்கிறது. ஆனாலும் இப்போது விஞ்ஞானத்தில் முதன்மையானவர்-களாயிருக்கும் அநேகர் மத்தியிலும்கூட இது புறக்கணிக்கப்படுகிறது; ஆனால் மேலோட்டமாக கல்வி கற்றவர்கள் மற்றும் மேலோட்டமாக சிந்திப்பவர்கள் மத்தியில், அது பயங்கரமான பொல்லாங்குகளைச் செயல்படுத்தியிருக்கிறது, தொடர்ந்து செயல்படுத்தும். அது நாத்திகர்கள், கடவுளை பற்றி அறிந்து கொள்ள முடியாது என்று நம்புகிறவர்கள் மற்றும், மத நம்பிக்கையற்றவர்களை உருவாக்கியிருக்கிறது. இது நம்முடைய இளைஞர்களை ஒழுக்கக் கேடடையும் படிச் செய்து, அவர்கள் தங்கள் முன்னோர்களுக்கு மேம்பட்டிருப்பதாகவும், அவர்கள் மிருகத்துடன் நெருக்கமான தொடர்புடனிருப்பதாகவும் நம்ப வைக்கிறது; இதனால் வீட்டிலும் நாட்டிலும், சமுதாயம் மற்றும் சபையிலும் சட்டம் மற்றும் ஒழுங்கை அவர்கள் அவமதிப்பதும் வளர்ந்து வருவதுடன், அவர்களுடைய சுபாவத்தின் தாழ்ந்த கூறுகளாகிய ஓரினச் சேர்க்கை முதலியவற்றை அனுபவிப்பதில் ஈடுபடுவது அதிகரித்து விட்டது. தேவன் இல்லை அல்லது தேவன் முதல் ஜீவிகளின் அமைப்புகளை மட்டும் தான் சிருஷ்டித்தார், எந்த சட்டத்-துக்கும் நாம் பொறுப்பாளியல்ல, எந்த மேலான அதிகாரமுமில்லை, மறுமை என்பது இல்லை மேலும் விலங்கின மரபு வழி வந்தவர்கள் என்ற எண்ணத்திலிருந்து வாலிபர்கள் மதம் மற்றும் அரசாங்கத்தை அவமதித்தல், பெற்றோருக்கு கீழ்ப்படியாமை, பாலின உறவில் ஒழுக்கக்-கேடு, போதை, மருந்துகள் மற்றும் குடி போதையிலிருத்தல், வாழ்க்கையின் மீது பொருள் சார்ந்த மனோபாவம் உள்ளவர்களாக மாறிவருவது ஒரு இயல்பான அடியெடுத்து வைத்தலாயிருக்கிறது. இன்றைய நாளில் நம்முடைய வாலிபர்கள் மற்றும் நடுத்தரவயதினர்களில் நாம் காண்கிற மனம், சமூகம் மற்றும் மதம் சம்பந்தமாக அதிகமான பேரழிவை கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலு-முள்ள ஒரு தலைமுறை பரிணாமவாதிகளான பேராசிரியர்-களும், அரசு பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களும் உருவாக்கி-விட்டனர். பரிணாமவாதிகளால் மனதில் ஆழமாக பதியவைக்கப்படுகிற அவநம்பிக்கை மற்றும் மிருகத்-தனமான உந்துணர்வுகளில் ஈடுபடுதல் பெருமளவில்

சபையிலும், தேசத்திலும் சகல இடங்களிலும் வெளியரங்கமாயிருக்கிற சன்மார்க்க வீழ்ச்சியை ஏற்படுத்தி உலகப்போரை அதன் இரண்டு கட்டங்களிலும் உருவாக்க மிகப்பெரிய பகுதியை பங்களித்துள்ளது, அதைப் போலவே அவை சீர்கேடடையச் செய்யும் வேலையில் பெரியபங்கைச் செய்வதுடன், தேசங்களை அர்மகெதோனுக்கும், உலக அராஜகத்துக்கும் வழிநடத்திக் கொண்டிருக்கிறது. இவை மனுக்குலத்தாருக்கு வரலாறு காணாத அளவில் பேரழிவை ஏற்படுத்தும் போது, சமுதாயம் மிகப் பெரிய சினங்கொண்டு எழும்பி, அந்தக் கொள்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் ஏற்க மறுப்பதுடன், அதற்குரிய இடமாகிய கல்லறையில் நித்தியமாக அதனைப் புதைத்து விடும். ***

# டார்வினின் பரிணாமவாதக் கொள்கை பற்றிய ஆராய்ச்சி

Darwinian Evolution Examined

**"ஞானவானாயிருக்க நீ முதலில் கர்த்தருக்குரிய பயபக்தியைக் கொண்டிருக்க வேண்டும். நீ பரிசுத்தரை அறிவாயானால் நீ அறிவைப் பெற்றிருக்கிறாய்." நீதி. 9:10** (Good News Bible மொழிபெயர்ப்பு).

ஞானமுள்ள பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு ஜீவியத்தில் ஒரு சரியான தொடக்கத்தைக் கொடுக்க விரும்புகிறார்கள். குறிப்பாக இது, பிரதிஷ்டை செய்திருக்கிற பெற்றோர்கள் விஷயத்தில் மிகவும் உண்மையாக இருக்கிறது. கல்வி சம்பந்தமான தேர்ந்தெடுப்புகளில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பொறுத்தது என்று விட்டுவிடாமல், தங்கள் பிள்ளைகளின் நலனுக்காக கிடைக்க கூடிய எல்லா வாய்ப்புகளின் நன்மைகளையும் பயன்படுத்திக் கொள்ள திட்டமிடுவார்கள். ஒவ்வொரு கல்வி ஸ்தாபனங்களின் தகவல் குறிப்புகளையும் ஆராய்ந்து பார்ப்பதுடன், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவைகளைக் குறித்துப் பேசி பெற்றோர்கள் கூட்டம் ஒவ்வொன்றிலும் கலந்து கொண்டு, ஆசிரியர்களிடமிருந்து ஆலோசனைகளையும் பெறுவர். பயிற்றுவிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திலும் முன்னேற்றத்தைப் பற்றி அவர்கள் பள்ளியிலிருந்து பெற்றுக் கொள்ளுகிற ஒவ்வொரு விளக்கமான அறிக்கையையும் மிகக் கவனமாக கூர்ந்து ஆராய்வார்கள்.

மனுஷீகப் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தொடக்கத்தைக் கொடுப்பதற்கு உச்ச அளவில் முயற்சி செய்வார்களானால், நிச்சயமாகவே, மனித குடும்பத்தின் சிருஷ்டிகரும் தம்முடைய உயர்வான மிகவும் அறிவுள்ள பூமிக்குரிய சிருஷ்டிப்பின் ஜீவியத்திற்கான சரியான ஊக்கமளிப்பதை உறுதிசெய்வதில் அக்கறையுடன் தான் இருப்பார். மனிதனுடைய சுற்றுச்சூழல் பற்றிய ஒரு ஆய்வு, சிருஷ்டிகர் பூமியை சூரியனிலிருந்து சரியான தூரத்தில் வைத்துள்ளார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. வளிமண்டலத்திலுள்ள வாயுக்கள், மனிதன் சுவாசிக்கவும், உயிர் வாழ்வதற்கும் ஏற்றபடி சரியாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. தாகம் தீர்த்துக் கொள்ளத்தக்க வகையில், பூமியிலிருந்து கிடைக்கும் தண்ணீர் அனைத்தும் உப்பு நீராக இல்லை. எனவே மனிதன் தண்ணீரைக் குடிக்க முடிகிறது. தாவர உயிரி மனுக்குலத்துக்கு ஏற்றதாக இருக்கிறது; இதனால், அவர்களின் சரீரங்களுக்கு உணவும், ஊட்டச்சத்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

பாதிக்கப்படக்கூடியதும் மென்மையானதுமான அவருடைய மனித சிருஷ்டிப்புகள் மீது சிருஷ்டிகரின் அன்பும் பெற்றோருக்குரிய பராமரிப்பும் தற்செயல் நிகழ்வின் விளைவு மட்டுமே என்று சொல்ல முடியாது. அப்படியில்லையெனில் பேரளவு எதிர்ப்புகள் நிறைந்த இப்பிரபஞ்சத்தில் மனிதன் எப்படி தொடர்ந்து உயிர்வாழ முடியும்? மனிதன் ஒரு தற்செயல் நிகழ்வின் விளைவு என்று வலியுறுத்துபவர்கள் அந்த விஷயம் முழுவதையும் ஜாக்கிரதையாக சிந்திக்கவில்லை என்பது தெளிவாகிறதுடன் கல் மற்றும் மரத்தினாலான சொரூபங்களின் முன்பாக அவைகள் எதோ சில வழியில் உயிரோடிருக்கிறார்கள் என்று நம்பி தலை வணங்குகிறவர்கள் போல ஒன்றை எளிதில் நம்பாதவர்களாக சந்தேகவாதிகளாக மாறும் அபாயத்திலும் இருக்கிறார்கள். (சங். 115:1-8). மறு பக்கத்தில், வேதாகமம் இந்த பூமி கிரகத்தில் மனிதன் அறிமுகப்படுத்தப்பட்டதின் விளக்கத்தைக் கொடுக்கிறது. அது அடிப்படை நம்பிக்கையின்மையிலிருந்து, நியாயமானதும், உண்மையானதும் அறிவுபூர்வமானதுமான நம்பிக்கைக்கு அப்படிப்பட்ட ஒரு விசுவாசத்தை உயர்த்துவதற்கு, இருதயம் மற்றும் மனம் இரண்டிற்கும் போதுமான அத்தியாவசியமான தகவல்களைக் கொடுத்து திருப்தி செய்யக் கூடியதாயிருக்கிறது.

வேதாகமத்தில் முதல் வசனமே, மனிதனுடைய தொடக்கத்தைப் பற்றிய அதன் முழுமையான போதனைக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகிறது. "**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**" (ஆதி. 1:1). இது வழிகாட்டுதல் மற்றும் நோக்கத்தைக் குறிக்கும் ஒன்றாக இருந்தது; மனுக்குலத்திற்கான குடியிருப்பை சிருஷ்டிப்பதில் தேவனுடைய திட்டம் அல்லது நோக்கத்தில் ஒழுங்கில்லா தன்மையோ அல்லது தற்செயல் நிகழ்வோ எந்த பங்கும் பெற்றிருக்கவில்லை. உண்மையாகவே, இந்த பிரபஞ்சம் பெரு வெடிப்புடன் (பிக் பாங்க்) (Big Bang) தொடங்கியிருந்தால், சிருஷ்டிகரால் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட்ட காரியத்துடன், அது கட்டுக்கடங்கிய வெடித்தலாகவும், பிரபஞ்சத்தின் பரப்பளவு மற்றும் பிரமாண்டம் ஆகியவை மகா உன்னத – யேகோவா தேவன் மற்றும் அது நிகழ்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பாகவே

அவருடைய முதல் பிரத்தியேகமான சிருஷ்டிப்பாகிய லோகாஸ் ஆகியோரால் மிக்க கவனமாக சிந்தித்து செயல்படுத்தப்பட்டிருந்ததாக இருந்திருக்கும். இந்த நிகழ்வுகளை மனிதன் நேரில் காணவில்லை, ஆனால் நாம் அறிவுப் பூர்வமான விசுவாசத்தை கட்டியெழுப்புதற்கு இந்த விஷயத்தைப் பற்றி நாம் கொஞ்சம் அறிந்து கொள்ளும்படியாக நம் அன்புள்ள சிருஷ்டிகரால் அருளப்பட்ட ஒரு விவர அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் என்றென்றுமாக இருக்கிறார் – கடினமான இந்த கருத்தானது, ஒத்துக் கொள்ள முடியாதிருக்குமானால், அளவுக்குட்பட்ட மனதால் அறிந்து கொள்ள முடியாது. முன்னொரு காலத்தில் தேவன் தம்முடைய ஜீவியத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள திட்டமிட்டிருந்தார் – அந்த காலத்தின்போது தேவன், எந்த தோழமையின் அவசியமும் இல்லாமல் முற்றிலும் தன்னிறைவுள்ளவராக இருந்தார் என்பதை நாம் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களுடன் ஜீவியத்தைப பகிர்ந்து கொள்வதில் அவருடைய உள்நோக்கம் சுயநலமானதாக இல்லை, ஆனால் மாறாக பொதுநல நோக்குடையதாக இருந்தது. இந்த அடிப்படைக் கோட்பாட்டை வேத மாணாக்கர்கள் தன்னலமற்ற அன்பு என்று குறிப்பிடுகின்றனர். (1 யோவா. 4:8).

சர்வ வல்லமையுள்ள தேவன் ஒரே ஒருவரைத்தான் சிருஷ்டித்தார். அவரையே, மீதமுள்ள தம்முடைய சிருஷ்டிப்பு பணிக்கு ஒரு பிரதிநிதியாகவும் பயன்படுத்திக் கொண்டார். தேவனுடைய இந்த பிரத்தியேகமான ஒரே நேரடியான சிருஷ்டிப்பைப் பற்றி நீதி. 8:22-ல் "**கர்த்தர் நமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்**" என்று தேவனால் அடையாள பாஷையில் மறைத்து குறிப்பிடப்பட்டுள்ளது. 'கொண்டிருந்தார்' என்று KJV-ல் மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தை "குவானா" (quanah) என்பது மிகத் துல்லியமாக "உண்டாக்கப்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். "**கர்த்தர் தமது கிரியைகளின் வழியில் ஆதியாக என்னை உண்டாக்கினார்**" (ரோதர்காம், கிரின், குட்நியூஸ் வேதாகம மொழிபெயர்ப்புகள் பார்க்கவும்).

பிதாவாகிய தேவன், புதிய ஏற்பாட்டில் ஒரே பேறான ஜெநிப்பிக்கப்பட்ட குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ள, தம்முடைய குமாரனை சிருஷ்டித்தது உண்மையாகவே ஜீவிகளின் சிருஷ்டிப்புக்கு சரியான தொடக்கமாகும். (யோவா. 1:14,18). அவர் தம்முடைய குமாரனை ஒரு ஊழியக்காரராக தம்முடைய சிருஷ்டிப்பில் மற்றவைகளை , சிருஷ்டிப்பதற்கு பயன்படுத்திக் கொள்வதற்காகவே அப்படிச் செய்துள்ளார். (நீதி. 8:30 யங் மொழிபெயர்ப்பு). கிரேக்க முன்னிடைச் சொற்களின் உபயோகத்திலிருந்தே, அப்போஸ்தலன் பவுல் இந்த கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம்; சபைக்குரிய போதனையும் "**பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, 'அவராலே'** (of whom) **சகலமும் உண்டாயிருக்கிறது: இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு அவர் 'மூலமாய்ச்'** (by whom) **சகலமும் உண்டாயிருக்கிறது: அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்**" என்பதாகவே இருந்தது. இரண்டு பேருக்காகவும், இரண்டு வித்தியாசமான செயலாற்றுதலுக்காகவும் இரண்டு வித்தியாசமான முன்னிடைச் சொற்கள் (of, by) உபயோகிக்கப்பட்டுள்ளன!

"லோகாஸ்" அவர்களின் சிருஷ்டிப்பு குறித்த இந்த விஷயத்தை யாராவது இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள விரும்பினால், எபிஃபெனி வேத பாட புத்தகங்கள் வரிசையில், சிருஷ்டிப்பு என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இரண்டாவது வால்யூமைப் படிக்குமாறு நாங்கள் அவர்களுக்கு பரிந்துரைக்கிறோம். அதில் இந்த விஷயம் முழுமையாக ஆராயப்பட்டுள்ளது. இப்போது எழும்பும் கேள்வி, அந்த "ஊழியக்காரர்," மற்ற சிருஷ்டிப்புகளைச் சிருஷ்டிப்பதற்கு எந்த முறையைப் பயன்படுத்தினார்?. மனித ஞானமானது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தனி ஒருவரான சிருஷ்டிகரை விட்டுவிடுவதற்கென்று புத்திசாலித்தனமான கட்டுக்கதைகளை உருவாக்கவும், மேலும் அதன் மூலமாக தங்களுடைய தெய்வீக சிருஷ்டிகர் சார்பாக மனுக்குலத்தார் பங்கில் உள்ள எந்த கடமைப் பொறுப்பையும் நீக்கிப்போடுவதற்கு தேடிக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்கள் ஜீவனுக்கு தவறான ஒரு தொடக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

கி.மு. 500-க்கும், கி.மு. 300-க்கும் இடைப்பட்ட காலத்தில் கிரேக்க தத்துவ ஞானிகள், பாபிலோனியர் மற்றும் எகிப்தியரின் பெருந்திரளான பல தெய்வ நம்பிக்கையையும் சிருஷ்டிப்பு சம்பந்தமான புராணக்கதைகளையும் ஒப்புக்கொள்ள மறுத்து, ஜீவன் எந்த விதத்திலும் தெய்வீக தலையீடு எதுவுமில்லாமல், தானாகவே உண்டானது என்ற எதிரான போதனையின் உச்சத்திற்கு சென்றுவிட்டனர். இயல்பாகவே உயிர்ப் பொருளிலிருந்தே உயிர் தோன்றியது என்கிற இந்த கொள்கையே நவீன பரிணாம கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த விஷயத்தில் சமரசம் செய்வதற்கோ அல்லது சமாதானப்படுத்திக் கொள்வதற்கோ எந்த வழியும் இல்லை. தேவனுடைய பிரதிநிதியாகிய அந்த "ஊழியக்காரர்" பரிணாமத்தைப் பயன்படுத்தியோ அல்லது அவர் நேரடியாகவோ தனித்தனியான உயிரினங்களைச் சிருஷ்டித்தார். ஒவ்வொன்றும் மற்றொன்றை ஜீவித்திருப்பதிலிருந்து நீக்குகின்றது. இது இங்கே சில சொற்பொருள் விளக்கங்களைத் தருவதற்கு நமக்கு உதவுகிறது தெளிவாக போதிப்பவன் தெளிவாக வரையறுத்து விவரிக்க வேண்டும் என்று பொதுவாக சொல்லப்படுகிறது. பரிணாமவாத கொள்கை பின்வருமாறு விவரித்து வரையறுக்கப்படுகிறது: "பல்வேறு வகையான பூமியின் வரலாற்றின் போது முந்தின வடிவங்களிலிருந்து வளர்ச்சியடைந்து பின்னர் உருமாற்றம் பெற்றதாகக் கருதப்படும் உருவாக்கம் ஆகும்."

இந்த கொள்கைக்கு முற்றிலும் எதிராக, சிருஷ்டிப்பின் கொள்கை பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது; "இந்த பிரபஞ்சம் மற்றும் ஜீவராசிகளாகிய உயிரினங்கள்

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி தேவனுடைய சிருஷ்டிப்பின் தனி வகையான செயல்பாடுகளினால் உண்டுபண்ணப்பட்டதேயல்லாமல், பரிணாமக் கொள்கை போன்ற இயற்கைக்கு மாறான உருவாக்கத்தினால் அல்ல." விலங்கினங்கள் வித்தியாசமான தட்ப வெப்பநிலைகள் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளுவதை பரிணாம உயிராக்க விளைவின் பண்பாகக் கொண்டு அநேகர் குழப்பமடைந்திருக்கின்றனர். அவைகள் தங்கள் ஜீவியத்தில் எதிர்கொள்ளவிருக்கும் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொண்டு ஜீவிக்கத்தக்கதாக தேவன் தம்முடைய சிருஷ்டிகளுக்குள் உள்ளிணைவான தகவல் அமைப்புகளை அமைத்துள்ளார் என்பதை உணர்ந்து கொள்ள அவர்கள் தவறிவிட்டார்கள். தகவமைத்துக் கொள்ளுதல் என்பது, புதிய நோக்கத்துக்கு ஏற்றபடி சில மாற்றங்களை இது உருவாக்கிக் கொள்ளுதல் மாற்றியமைத்துக் கொள்ளுதல்; இதை பரிணாமக் கொள்கையுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது.

திரு.டார்வின் 1859-ம் ஆண்டில், அறிந்து கொள்ளாத ஏழு விஷயங்கள் இவைகளே. (1) ஒரு சிக்கலான மரபணு குறியீடு உயிரணுக்கள் நிலையில் கண்டுபிடிக்கப்பட இருந்தது. (2) (மரபுவழி) பரம்பரைப் பண்பு விதிகள் கிரிகார் மெண்டெல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட இருந்தது. (3) திடீர் நிகழ்வுக் (அழிவமைவு) கோட்பாடு இம்மானுவேல் வெளிகோவ்ஸ்கி என்பவரால் அறிமுகப்படுத்தப்பட இருந்தது. (4) அவருடைய கொள்கை 150 ஆண்டுகளுக்குப் பின்பு ஒழுக்கச் சீர்கேட்டுக்கு வழிநடத்துவதாயிருந்தது (5) 'கிடைக்காமல்போன தொடர்பு' என்பது ஒன்றரை நூற்றாண்டுகளுக்குப் பின்பு இன்னும் காணப்படாமலே இருப்பது (6) மரபணு உருவாக்கம் ஏற்கனவே இருக்கிற மரபணு உருவாக்கத்திலிருந்தே வர வேண்டும். (7) நானோ தொழில்நுட்பம் மற்றும் குறைக்கமுடியாத பெருஞ்சிக்கல் ஆகியவை அவருடைய கொள்கையைத் தவறு என்று நிரூபிக்கும்.

நாம் இப்பொழுது மேற்கூறிய ஒவ்வொன்றையும் சற்று விளக்கமாக ஆராய்ந்து பார்ப்போம். இந்த ஏழு விஷயங்களும் அநேக விஷயங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அதிகமாக கூட்டிக் கொள்வது சாத்தியம் தான். ஆனால் காலமும், இடமும் இந்த விஷயத்தில் விரிவான விளக்கம் தருவதைத் தடுக்கிறது.

உயிரினம் பற்றி DNA-யின் வடிவமைப்பு வரைபடம் கண்டு பிடிப்புக்கான பெருமை இங்கிலாந்து விஞ்ஞானியான பிரான்சிஸ் க்ரிக் மற்றும் ஜேம்ஸ் வாட்சன் என்ற அவருடைய அமெரிக்க உடன் பணியாளரையே சாரும். ஆனால், அதன் ஆரம்ப கண்டுபிடிப்பாளர் 1868-ம் ஆண்டில் அமெரிக்க விஞ்ஞானியான F. ய்ஷெர் என்பவர் ஆவார். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின்புதான், அதன் முக்கியத்துவம் வாட்சன் மற்றும் க்ரிக் என்பவர்களுடைய இரட்டை திருகுச் சுருள் ஒழுங்கமைப்பு (Double helix plan) முன்னேற்றத்துடன் உண்மையாகவே பாராட்டப்பட்டது. இந்த எதிர்பாராத தோற்றமான கண்டுபிடிப்பு அனைத்து உயிரியல் பாட புத்தகங்களும் மாற்றி எழுதப்பட காரணமாக அமைந்தது; உடனடியாக அறிவியல் உலகின் சொல் அகராதியில் புதிய வார்த்தைகள் அடுக்கடுக்காகப் பிரவேசித்தன. இதன் விளைவாக மனிதர்கள் சிருஷ்டிப்பின் மிகச் சிறிய அலகுகளுக்குள் உற்று நோக்குவதற்கு அனுமதித்த வளர்ச்சியடைந்த தொழில்நுட்பமும் கைகோர்த்துக் கொண்டு வந்தது. வடிவமைப்பு வரைபடம் (blue print) என்பது நிலம் வழங்கல், கட்டிடப்பணி அல்லது தயாரிப்பு பற்றிய விவரம் ஆகியவற்றுக்கான வடிவமைக்கப்பட்ட திட்டம் அல்லது ஒரு மாதிரி அல்லது வார்ப்பு உருவுக்கான தொழில் நுட்ப வரைபடம் ஆகும். உயிரினத்தின் செயல் முறையின் செயல்பாட்டில் DNA டி.என்.ஏ-யின் பங்கு பற்றிய அறிந்துணர்தல் சில விஞ்ஞானிகளின் கடவுள் நம்பிக்கையற்ற கொள்கையைப் பற்றி கேள்வி எழும்பும்படியாக வழிநடத்தியது. வடிவமைப்பு வரைபடத்தை ஏதோவொரு வடிவமைப்பாளர் வரையாமல் அதைப்பற்றி யாராவது கேள்விப்பட முடியுமா? இந்த கண்டுபிடிப்பு ஏராளமான பிற ஆச்சரியமான கண்டுபிடிப்புகளுக்கு வழிநடத்தியது. இதில் மனுக்குலத்தார் எல்லாருக்குமான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் வடிவமைப்பு வரைபடத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்த C.T. ரஸல் போதகரின் வேலையும் நினைவூட்டப்படுகிறது. அது இன்னும் மிகுதியான வேதாகமத்தின் உள்ளார்ந்த நுண்ணறிவுத்திறனுக்கு வழிநடத்தியது.

டார்வினும், அவருடைய கூட்டாளியும், பரிணாமக் கொள்கையின் இணை படைப்பாளியுமான ஆல்பிரட் வாலேஸ் என்னும் ஆவி உலக தொடர்பாளரும் DNA-யில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஜீவராசியின் வடிவமைப்பு வரைபடத்தைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தார்களானால் அவர்கள் இயற்கைத் தேர்வு கொள்கையின் மீது தங்கள் பயணத்தை தொடங்கியிருப்பார்கள். திரு.டார்வின், ஆஸ்திரியா மடாதிபதியாகிய கிரிகோர் மெண்டெல் என்பவருடைய வேலையைப்பற்றி அறிந்திருக்க வில்லை. 1865-ம் ஆண்டில் மரபு விதிகளில் அவருடைய கண்டுபிடிப்புகள் 1900-ம் ஆண்டில் டார்வினின் கொள்கையை இகழ்ச்சியான நிலைக்கு கொண்டு வந்து, அதன் ஆதரவாளர்கள் ஒரு புதிய, மற்றும் சீரமைக்கப்பட்ட கொள்கையை முன்வைத்தனர். தாவரங்களின் இனப்பெருக்கத்தில் மெண்டெல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இனப்பெருக்க முறைகளில் தொடர்ந்து இருந்த குணப்பண்புகளின் மாறாத தன்மை தாவர வகை பிரிவுகளில் மாற்றங்களை அனுமதிக்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரன் க்யூவீர் என்பவரால் வழிநடத்தப்பட்ட திடீர் நிகழ்வு மண்ணியல் மாற்றக் கோட்பாட்டாளர்களுக்கும், வக்கீலான சார்லஸ் லயல் என்பவரால் வழிநடத்தப்பட்ட மண்ணியலின் சீரான தன்மை கோட்பாட்டாளர்களுக்குமிடையே (படிப்படியாக மாற்றமடையும் என்ற கொள்கையுடையவர்கள்)

கருத்து வேறுபாடு யுத்தம் நிகழ்ந்தது. ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆயிரம் வருடங்களாகிய குறுகிய காலத்தில் பூமியின் மீது பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது என்று முந்தியவர் போதித்தார். அதே நேரத்தில் திரு.லயல் என்பவர், இந்த மாற்றங்கள் லட்சக்கணக்கான வருடங்கள் கொண்ட மிக நீண்ட காலப்பகுதியில் தான் ஏற்பட்டிருக்கும் என்று வாதிட்டார். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நடப்பதை ஒருவர் பார்த்ததே எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே-யிருக்கிறது என்பதையும் அவ்வப்பொழுது ஆங்காங்கே நடைபெறுகிற உள்ளூர் வெள்ளப்பெருக்கு அல்லது சிறிய அளவிலான எரிமலை வெடிப்பு ஆகியவை தவிர இயற்கையின் சமநிலைத்தன்மையைப் பாதிப்பதற்கு எந்த வித விதிவிலக்கான நிகழ்வும் ஏற்பட்டதில்லை என்பதையும் ஏற்றுக் கொள்வது தர்க்கரீதியாக மிகவும் பொருத்தமான-தாகவே தோன்றுகிறது.

லயல் என்வருடைய தவறான கருத்துக்கள் மற்றும் மாயையான நோக்குகள் முதலிடம் பெற்று, டார்வினின் கொள்கைக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட சிலவற்றை - அதாவது கால அவகாசத்தைத் தந்தது. லட்சக்கணக்கான வருடங்கள் கொண்ட, மண்ணியலின் சீரான தன்மை கொள்கை (Uniformitarianism) யுகங்களில், கண்ணுக்கு புலப்படாத முறையில் மிக நுட்பமான சிறிய மாற்றங்களால் உயிரினங்களின் மாற்றும் நிகழ்ந்திருக்க-லாம் என்கிற தவறான நம்பிக்கையை ஆதரித்து வளர்ப்பதற்கு உதவியாக இருந்தது. மண்ணியலின் திடீர் நிகழ்வு கொள்கை (Catastrophism) அந்த நாளில் வென்றிருந்தால், பரிணாமவாதக் கொள்கையை மனுக்-குலத்தின் மீது திணித்திருக்க முடியாது, ஏனெனில், அது ஆயிரக்கணக்கான வருடங்களாக மட்டுமே ஆகியிருக்கும். டார்வினின் போலியான, யூகங்கள் நிகழ்வதற்கு அது மிகக் குறுகிய காலமாக இருந்தது.

மண்ணியலின் திடீர் நிகழ்வு கொள்கை மரித்து புதைக்கப்பட்டு, மறக்கப்பட்டு விட்டது என்று அறிந்த செய்தியில், டார்வின் பாதுகாப்பாக உணர்ந்திருக்க வேண்டும். இந்த கோட்பாடு அவருடைய மரணத்துக்கு பிறகு சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின்பு மறுமலர்ச்சியடையும் என்று அவர் அரிதாகவே கனவு கண்டிருப்பார். மண்ணியலின் திடீர் நிகழ்வு கொள்கையின் மறுமலர்ச்சி இம்மானுவேல் வெளிகோவ்ஸ்கி என்கிற குறிப்பிடத்தக்க ஒரு மனிதனின் முக்கியமான வேலையாயிருந்தது. 1956-ம் ஆண்டில் "பெருமளவிலான திடீர் மாற்றத்தில் பூமி" என்ற அவருடைய படைப்பானது யூனிபார்மிட்டேரியனிஸம் - என்ற தன்மை கொள்கையை கவிழ்க்கத் தொடங்கியது. ஆரம்பகால படைப்புகளில் (உதாரணமாக 'மோதலில் உலகங்கள்') அவர் தம்முடைய கொள்கைகளை ஸ்தாபிப்ப-தற்காக பல்வேறான நாட்டுப்புற புராணக்கதைகளை-யெல்லாம் பயன்படுத்தினார். ஆனால் இந்த படைப்பில் அவர் இந்த மூல ஆதாரங்களையெல்லாம் மறுதலித்து, தம்முடைய ஆதாரத்துக்காக முழுவதுமாக "எலும்பையும் கல்லையும்" மட்டுமே நம்பினார். அவருடைய 1956-ம் ஆண்டு, படைப்பு முழுமையாக ஆராய்ச்சி செய்யப்பட்டு, உலகமானது அதன் சமீபத்திய கடந்த காலத்தில் தொடர்ச்சி-யான மிகப்பெருமளவிலான பேரழிவு நிகழ்வுகளைக் கொண்டிருந்தது என்பதை ஒவ்வொருவரும் அறிந்-துணர்ந்து கொள்ளும்படியாக தெளிவாக எழுதப்பட்டிருந்தது.

வெலிக்கோவ்ஸ்கி அவர்கள் விஞ்ஞானம் சார்ந்த சமூகத்தால் தொடர்ந்து தொல்லைபடுத்தப்பட்டு, துன்புறுத்தப் பட்டார், ஏனெனில், அவருடைய அறிவுப்பூர்வமான படைப்பானது, இயற்கையான தேர்வு செய்தல் மூலம், லயல்லின் யூகங்களைப் பொய்யாக்கியதோடு டார்வினின் பரிணாமவாதக் கொள்கையின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தின் நிழல்களை வீசுவதாக இருக்கிறது என்று அவர்கள் உணர்ந்தார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டும். ஒரு எழுத்தாளர் கூறுகிறது போல, இம்மானுவேல் வெலிக்கோவ்ஸ்கி "அறிவியல் சார்ந்து நிறுவப்பட்டவை-களின் தீராத பகையைச்" சம்பாதித்துக் கொண்டார். விக்டோரியா சகாப்தத்தின் பிந்திய காலத்தில் H.H. ஹௌவர்த் மற்றும் J.J. ப்ரஸ்ட்விக் ஆகியோருடைய மதிப்புமிக்க ஆராய்ச்சிகளுக்கு எதிராக எல்லோரும் ஓர் தீங்கு விளைவிக்கும், புரோக்ருஸ்டியன் - வன்முறையால் அளவுக்கு உட்படுத்தும் முன்கூட்டியே கொண்டிருந்த தப்பான அபிப்பிராயத்தின் மூலமாக டார்வினின் இருண்ட உலகளாவிய கருத்தை எந்த சிந்தனையுமின்றி விரும்பி ஏற்றுக் கொள்வதற்கு மூடிக் கொண்டன.

டார்வினின் அனுமானங்களின் வருகையுடன் "காணாமற்போன தொடர்புக்கான" தேடுதல் தொடங்கியது. உண்மையாகவே புவியியல் பதிவுகளிலுள்ள முழு சங்கிலிகளும் காணாமற் போனதுடன், அவருடைய கொள்கைக்கு இந்த அத்தாட்சி மிகவும் அத்தியாவசிய-மாயிருந்ததால், டார்வின் அவருடைய மரணத்திற்கு சற்று முன்பு, நம்பிக்கை இழந்த நிலையில் அப்படிப்பட்ட அத்தாட்சி எதையாவது கண்டுபிடிப்பவருக்கு வெகுமதியளிக்க முன்வந்தார். (அவர் கடிதத்தை பக்கம் 55-ல் பார்க்கவும்) 1881-ம் ஆண்டில், ஒரு புதை படிமத்தை கண்டுபிடிப்பதற்கு 200 பவுண்டுகள் வெகுமதி என்பது மிகப் பெரிய தொகையாக இருந்தது. இந்த கடிதம் சர்.ஆர்ச்சிபால்டு கீய்கி என்பவருடைய "ஒரு நீண்ட ஆயுட்கால வேலை" (1924) என்னும் சுயசரிதையின் பக்கம் 192-ல் காணப்படுகிறது. 1882 முதல் அந்த வெகுமதியை ஒருவரும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை!

நம்முடைய யுகம் கண்டுபிடிப்புகள் நிறைந்த ஒன்றாகவும், முன்னர் மறைவாக இருந்த விஷயங்களை வெளிப்படுத்துகிற காலமாகவும் இருக்கிறது. 1933-ம் ஆண்டில் மின்னணு நுண்ணோக்கியின் (electronic microscope) வருகை அநேக நுண்ணிய உயிரினங்கள் மற்றும் அவைகளின் செயல்பாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது; அவைகளைக் குறித்து டார்வின் முற்றிலும் எதுவும் அறியவில்லை. அப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க

டௌன், பெக்கென்ஹாம், கென்ட், நவம்பர், 1881. எனக்கன்பான ஐயா,

கீழ்நிலை கார்போனிபெரஸ் அடுக்குகளின் (பூமியின் வரலாற்றில் மண்ணுக்கடியில் நிலக்கரி படிவுகள் உருவான காலப்பகுதி) பண்பு பற்றிய பிரமாதமான கண்டு பிடிப்பு பற்றிய உங்களுடைய விரிவான அறிக்கையில் நான் மிகவும் ஆர்வங் கொண்டுள்ளேன். இவ்வளவு அதிகமான தேள்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், ஏதோ ஒரு புதிய இடத்தில் மேலேயுள்ள பாறைகளைத் தகர்த்து தேடியிருந்தால் மற்ற நிலவாழ் விலங்குகள் மற்றும் தாவரங்கள் இருக்குமென்று நம்பலாம். ஆனால் நில அளவீடு செய்யும் அதிகாரிகளை இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுத்துவதில் நியாயம் இருப்பதாக நீங்கள் நினைக்க மாட்டீர்கள் என்று துணிந்து கூறுகிறேன். இது எனக்கு ஒரு பொதுவாய்ப்பை வழங்க வழிவகுக்கிறது. அவ்வாறு செய்வதில் நான் சுதந்திரம் எடுத்துக் கொள்கிறேன் என்று நீங்கள் நினைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதாவது மேலும் புதியதும் பெரிதுமான பேலியோண்டாலா ஜிக்கல் (புதை படிவ இயல்) புதையல்களைக் கண்டுபிடிக்கும் வாய்ப்புக்காக மேலும் தேடுவது பயனுள்ளதாக இருக்குமென்று எண்ணி நம்பிக்கையுடன் அனுப்புவதற்கு நீங்கள் கண்டுகொள்ளும் ஒருவருக்கு வெகுமதியாக 100 அல்லது 200 பவுண்டுகள் வழங்குகிறேன். எனது கருத்து முன்வைப்பு உங்களுக்கு மிகையானதாகவோ அல்லது ஆணவமாகவோ தோன்றினால் என்னை மன்னித்து என்னை நம்புங்கள்.

எனக்கன்பான ஐயா,

உங்கள் உண்மையுள்ள

சா. டார்வின்

"காணாமற்போன தொடர்பை" கண்டுபிடிக்க திரு. டார்வினின் இறுதி முயற்சி? அவர் இதை சர். ஆர்ச்சிபால்டு கீய்கிக்கு எழுதினார். அவர் இந்த குறிப்பிடத்தக்க ஆவணத்தை "ஒரு நீண்ட ஆயுட்கால வேலை" என்றழைக்கப்படும் தனது சுய சரிதையில் பதிவு செய்தார். சுமார் ஆறு மாதங்கள் கழித்து அடுத்து வந்த ஏப்ரலில், டார்வின் மரித்தார். திரு. டார்வினுடைய 200 பவுண்டு. ஒரு போதும் கோரப்படவில்லை. இந்தப் பரிசுத்தொகையின் நிகழ்கால மதிப்பு சுமார் 9000 பவுண்டுகள் ஆகும். உண்மையிலேயே நம்பிக்கை இழந்த ஒரு மனிதன்!

கண்டுபிடிப்புகள் பரிணாமக் கொள்கையை பல ஆண்டுகளுக்கு முன்பாகவே குப்பைத் தொட்டிக்கு அனுப்பி விட்டது.

1948-ம் ஆண்டு இங்கிலாந்தில் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் முதல் கணிணிகளில் ஒன்று உண்டாக்கப்பட்டதிலிருந்து, தகவல் தொடர்பு மற்றும் தகவல் சேகரித்து வைத்தல் வழியில் புரட்சிகரமான முன்னேற்றம் நடைபெற்று வருகிறது. தகவல் தொழில் நுட்பம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதுடன், மனுக்குலத்திடம் பிரமிக்கத்தக்க அளவில் செல்வாக்கு செலுத்துகிறது. இந்த துறை ஆராய்ச்சியில் ஒரு முதன்மையான, விஞ்ஞானியான, Dr.வெர்னர் கிட் ஜீவியத்தின் மூலக் கோட்பாடானது, பொருள் மற்றும் ஆற்றலை மட்டும் கொண்டுள்ளது என்பது கைவிடப்பட்டு தகவலும் சேர்க்கப்பட வேண்டிய காலம் வந்திருக்கிறது என்ற கருத்தை முன்வைக்கிறார். மரபியல் துறையில் கண்டுபிடிப்புகளுடன், தகவலின் பங்கும் பொருள் மற்றும் ஆற்றல் ஜீவியத்துக்கு முக்கியமாயிருக்கிறதை போலிருப்பது மென்மேலும் அதிக தெளிவாகிறது.


விஞ்ஞானத்தின் பொருள்வாதக் கோட்பாடு, கடவுள் நம்பிக்கையின்மையின் குழந்தையாக இருக்கிறது. ஆற்றலும் பொருளும் மட்டுமே ஜீவியத்தை சாத்தியமாக்குகிறது என்று இந்த கொள்கை போதிக்கிறது. ஆற்றலுக்கும் பொருளுக்கும் அறிவுத்திறன் இல்லை. தகவல் அத்துடன் கூடச் சேரும் போது, இந்த கோட்பாடு முற்றிலும் மாற்றப்படுகிறது. தகவல் வளர்ச்சியில் உயர்வான அறிவு நுட்பம் இடம் பெறுகிறது வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஜீவியத்துக்குள் தகவல் இடம் பெறுவது தேவன் இருக்கிறார் என்று சாட்சி பகர்கிறது. நம்முடைய மரபியல் குறியீட்டில் காணப்படும் தகவல் - ஜீவனுள்ள, அறிவு மிக்க மூல ஆதாரத்தால் உருவாக்கப்பட்டது என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

திரு.டார்வின் அறிந்திராத, நம்முடைய ஏழாவதில் இறுதியான விஷயம் "குறைக்க முடியாத சிக்கல்" என்று அழைக்கப்படும் கொள்கையாகும். நானோ தொழில்நுட்பம் (Nano technology) என்னும் விஞ்ஞான ஆராய்ச்சி முறையியல் தான் இந்த விந்தையான கண்டுபிடிப்புக்கான காரணமாகும். குறைக்க முடியாதது என்ற வார்த்தைக்கு நம் சொல் அகராதி கொடுக்கும் அர்த்தம், "ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு குறைக்கப்படக் கூடாதது" என்பதாகும். விஞ்ஞானிகள் அதிக மேம்பட்ட மற்றும் நுண்ணியம் உடைய அதிக சக்தி வாய்ந்ததுமான எலக்ட்ரானிக் நுண்ணோக்கியைக் (microscope) கொண்டு மூலக்கூறு மற்றும் அணு நிலையில் செல் அமைப்புகளை ஆய்வு செய்யத் தொடங்கிய போது, அவர்கள் குறைவான சிக்கலையல்ல, மாறாக, அவர்கள் முற்றிலும் அதிர்ச்சியுடன் அதிசயப்படுமளவுக்கு அதிக சிக்கலைக் கண்டார்கள். மிகவும் சிறிய ஜீவ(ன்களில்) ராசிகளில் உயிர்ப்பொருள் குறைவாக அல்ல, மிகவும் அதிக சிக்கல் வாய்ந்ததாகவே மாறியிருக்கிறது.

மைக்கேல் J.பெகி என்பவரைப் பொறுத்தவரை (டார்வினின் கறுப்புப் பெட்டி 1998 சைமன் மற்றும் சுஸ்டர் நியுயார்க்), உயிரணு (செல்) என்பது டார்வினுக்கு திறக்க முடியாத ஒரு கறுப்புப் பெட்டி ஆகும். இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானிகள் மனித உயிரணுவை (செல் - ஒரு உயிரியின் மிகச் சிறிய கட்டமைப்பு மற்றும் நடைமுறை சார்ந்த அலகு) - X- கதிர்கள் (x-ray) படிக அமைப்பு ஆய்வியல் கருவியைப் பயன்படுத்தி திறந்த போது, அணு மற்றும் மூலக் கூறு அளவிலான (cell-செல்) உயிரணுவின் சிக்கலான அமைப்பு வெளிப்படுத்தப்பட்டது. இந்த அமைப்புகள் உயிர்ப்பொருளாக வந்தது. அறிவுத்திறன் வாய்ந்த அதன் வடிவத்தின் மூலமாகவே என்ற ஒரே வழியை அவைகள் வெளிபடுத்தியதால், இந்த கண்டுபிடிப்புகள் பரிணாமவாத கொள்கைக்காரர்களுக்கு விருப்பமற்றதாக இருந்தது. ஒவ்வொன்றும் மற்றவற்றின் பாகங்களுடன்

ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பது (cell) உயிரணுவின் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்துவது, வடிவமைப்பு வரைபடம் (புளூ பிரிண்ட்) இல்லாமல் சாத்தியத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

கடந்த நூற்றாண்டின் கண்டுபிடிப்புகள் டார்வினியன் கொள்கையைப் பின்பற்றியவர்களை "தட்டையான பூமி" கொள்கைக்காரர்கள் தங்களுக்கு நேர்ந்த அதே கதியான சூழ்நிலைக்குத் தள்ளியது. ஏனெனில் பூமியைச் சுற்றி வந்த செயற்கைக் கோள்களிலிருந்து அனுப்பப்பட்ட பூமியின் படங்கள். பூமி கோள வடிவமானது என்பதை எந்த சந்தேகத்துக்கும் அப்பாற்பட்டதாகக் காட்டியது. அதே போல, மனித ஜீவியமும், பிரபஞ்சத்தின் கடும் சிக்கலான இயக்கமும், சர்வ ஞானமும் அன்புமுள்ள சிருஷ்டிகரிடமிருந்து வெளிப்படுகிற அறிவுத்திறம் வாய்ந்த நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டது என்பதை விட, எந்த விதமான வேறு நோக்குநிலையிலிருந்தும் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகக் காண முடியாது. ***




ஒரு சாதாரண எலிப்பொறியின் படம் (ஒப்புக் கொள்ளுதல்)

இந்தப் படம் மைக்கேல் ஜே. பெஹி எழுதிய "டார்வினின் கறுப்பு பெட்டி" பக்கம் 43 (2003 பதிப்பு) – லிருந்து எடுக்கப்பட்டது. இந்த புத்தகத்திற்கு "பரிணாமவாதத்திற்கு உயிரி வேதியலின் சவால்" என்று பொருத்தமாக துணை பெயரிடப்பட்டுள்ளது. இது ஒரு முன்னோடி படைப்பாகும். சிருஷ்டிப்பைப் பற்றிய ஆராய்ச்சி துறையில் பயனுள்ள விளைவுகளை உருவாக்கும் கருத்துக்கள் கொண்டுள்ளது. மூலக்கூறு நிலையில் டார்வினியன் பரிணாமவாதத்தின் தவறுகள் மற்றும் தோல்விகள் பற்றி உண்மையிலேயே கண்களைத் திறக்கும் ஒரு தலைசிறந்த கண்ணோட்டம்.

ஒரு (Cell - செல்) உயிரணுவில் உள்ள "குறைக்க முடியாத சிக்கலான தன்மையை," விளக்குவதற்கு புத்தக ஆசிரியர் ஒரு எலிப் பொறியின் பாகங்களைப் பயன்படுத்துகிறார். ஒரு பாகம் அகற்றப்பட்டாலும் அது பயனற்றதாகி விடும். அதன் செயல்பாட்டிற்கு அனைத்து பாகங்களும் அவசியம். அது செயல்படுவதை நிறுத்தும் போது அது இருப்பதற்கான எந்த காரணமும் இல்லை. எப்படி ஒரு உயிரணு (Cell) வெறும் குருட்டுத்தனமான செயல் நிகழ்வாக வந்திருக்கும்?

# வேதாகமமும் பரிணாமவாதக் கொள்கையும்

## *Bible Vs Evolution*

Tracts / Pamphlets

❖ உங்களுக்குத் தெரியுமா: அநேகர் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் போன்றவற்றில் பரிணாம வாதம் பற்றி கற்பிக்கப்பட்டிருப்பதால், இந்த கொள்கையானது உண்மைகளுடனும் மற்றும் வேத உபதேசங்களுடனும் ஒத்து இருக்கிறதா இல்லையா என்பதைத் தனிப்பட்ட முறையில் எப்பொழுதுமே கண்டுகொள்ளாமல் இதை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அனைவரும் அப்படிப்பட்டதொரு விசாரித்து ஆராய்தலை மேற்கொள்ள வேண்டும்.

❖ உயிரினங்களும் மற்றும் மனிதனும் நூறாயிரம் ஆண்டுகளிலிருந்து இலட்சக்கணக்கான ஆண்டுகளாக பூமியின் மீது எங்கேயோ வாழ்ந்திருக்கிறார்கள் என்று பரிணாமவாதக்காரர்கள் மதிப்பிடுகின்றனர். இப்படி ஒவ்வொருவரிடமும் உள்ள இந்த யூகங்களில் காணப்படும் பரந்த வேறுபாடுகளே அவர்களுடைய நம்பகமற்ற தன்மைக்கு ஒரு மிகச் சிறந்த அத்தாட்சியாகும்.

❖ "**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்**" (ஆதி. 1:1) என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் இந்த "ஆதிக்கும்" – ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள ஆறு பெரிய "நாட்கள்" தொடங்குவதற்கும் முன்பாக "**பூமியானது [இருந்திருக்கிறது, ஆயினும்] ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் [வெறுமையும் காலியானதுமாக] இருந்தது**" என்று வசனம் 2-ல் விவரிக்கப்பட்ட நிலைமைகளுக்கும் இடையிலுள்ள நீண்ட காலத்தைப் பற்றியோ அல்லது எவ்வளவு காலமாக ஆவி அல்லது தேவனுடைய வல்லமை ஜலத்தின் மேல் அசைவாடி அல்லது ஜலத்தில் ஆற்றல் புரிந்து கொண்டிருந்தது (ஆதி. 1:2) என்பது பற்றியோ நமக்குச் சொல்லப்படவில்லை. அப்பொழுதுதான் பூமியானது மனிதனுக்காக தயார் செய்யப்பட்டது.

❖ வேதாகமத்தில் "நாள்" என்கிற வார்த்தை ஓர் நீண்ட காலப் பகுதியைக் குறித்துக்காட்ட அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. (உதாரணமாக, 40 வருடங்கள் - சங். 95:8-10; 1000 வருடங்கள் 2 பேது. 3:8; சுவிசேஷ யுகம் முழுவதும் - 2 கொரி.6:2) சூரியனும், சந்திரனும் நாலாவது "நாள்" வரை பூமியில் காணும்படியாக ஆக்கப்படவில்லை என்று ஆதி. 1 : 14-18 காட்டுகிறது.

❖ ஆகவே, இந்த ஆறு சிருஷ்டிப்பு "நாட்கள்" ஒவ்வொன்றும் 24 மணி நேரங்கள் கொண்ட சூரிய நாட்கள் அல்ல, ஆனால் சகஸ்திராண்டுகளாகும் (யுகங்களாகும்). வேதாகமம் அவைகளைப் பற்றி, அவைகள் ஒவ்வொன்றும் 7000 வருடங்கள் கொண்ட காலப்பகுதி என்று சுட்டிக் காட்டுகிறது. - ஆகவே, அவைகளின் இடைப்பட்ட காலம் பொறுத்த வரையில் வேதாகமமும், விஞ்ஞானமுமாகிய இவை இரண்டுமே பரிணாமவாதக்காரர்களின் கொடிய யூகங்களுடன் முரண்பட்டதாக இருக்கிறது. ஆகிலும் வேத வாக்கியங்கள் (இருண்ட யுக மதக்கோட்பாடு நோக்கு நிலையிலிருந்து வேறுபட்டதாக) உறுதிபடுத்தப்பட்ட அறிவியல்பூர்வமான கண்டுபிடிப்புகளுடன் முரண்பட்டிராமலும் காணப்படுகிறது.

❖ தேவன் பலதரப்பட்ட வகையான தாவரங்களையும், விலங்குகளையும் வெவ்வேறாகவும் தனித்தனியாகவும் சிருஷ்டித்தார் என்று வேதாகமம் சொல்லவில்லை. மாறாக, அவருடைய ஆவி அல்லது வல்லமை "அசைவாடியது." (ஆதி. 1:2). அதாவது, அது அடைகாத்தல் போன்றது (brooded) அல்லது ஆற்றலூட்டியது; அதன் விளைவாக,

ஜலமும், பூமியும் தாவரங்களையும், விலங்குகளையும் தங்கள் தங்கள் ஜாதியின் படியே முளைப்பித்தும் பிறப்பிக்கவும் செய்தது. (ஆதி. 1:12,20,24).

❖ உங்களுக்குத் தெரியுமா: பரிணாமத்தின் ஒரு வகையானது, மனிதனுடைய காரியத்தைத் தவிர்த்து, மற்றவைகளின் சிருஷ்டிப்பில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம். தேவன் தாவரங்களின் வகைகளையும் கீழ்நிலை விலங்குகளையும், ஒன்றிலிருந்து மற்றொன்று உருவாகும்படியாகவோ அல்லது தனித்தனியாகவோ அல்லது அநேக எளிய உயிர்வடிவங்களிலிருந்தோ "பிறப்பித்திருப்பார்."

❖ வேதாகமமோ அல்லது கற்பாறைகளோ இதர உயிர் வகைகள் சிருஷ்டிப்பில் எந்த வகை, திட்டவட்டமாக பயன்படுத்தப்பட்டது என்று வெளிப்படுத்தவில்லை. ஆனால், தாவரங்கள் ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே முளைக்கப்பண்ணிய பிறகு, மனிதன் அவைகளை ஒன்றோடொன்று வெற்றிகரமாக கலந்து விட முடியாதபடி, மாற்ற முடியாத வழியில் தற்போது அவைகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளது என்கிற விஷயத்தில் வேதாகமமும், விஞ்ஞானமும் ஒத்துப்போகிறது.

❖ "இயற்கை" அல்லது "குருட்டு விசை" (Blind force) மட்டுமே சிருஷ்டிகராக இருந்திருந்தால் நம்மைச் சுற்றிக் காணப்படுகிற எல்லா தாவரங்களும் மேலும் மாற்றமடையாமல் நிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையை அடைந்துள்ளதை நாம் பார்ப்பதற்கு பதிலாக பரிணாம வளர்ச்சியும், படிப்படியாக கீழ்நிலை அடைதலும் இப்பொழுதும் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதை நாம் பார்த்திருக்க வேண்டும்.

❖ மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உயிரின வகைகளில் ஒன்றோடொன்று கலக்கும்போது சில நேரங்களில் கலப்பினங்கள் உருவாகின்றன. (உதாரணமாக, ஆண் கழுதை பெண் குதிரையுடன் இணையும்பொழுது கோவேறு கழுதை (mule) உருவாகிறது.) ஆனால் அப்படிப்பட்ட கலப்பினங்களால் இனப்பெருக்கம் செய்ய முடியாது.

❖ திரு. டார்வினுடைய பரிசோதனையில், உதாரணமாக, புறாக்களை வைத்து, அதே இனத்துக்குள் கால் வரை மிகுதியான இறகுகள் கொண்ட ரகம், கிரீடம் போன்ற தலையையுடைய ரகம் போன்ற பலதரப்பட்ட ரகங்களை அவர் வெற்றியுடன் உருவாக்கியபோதும், அவரால் புறாக்களை வேறு இனங்களாக மாற்றம் செய்ய முடியவில்லை - அவருடைய புறாக்கள் அப்படியே புறாக்களாகவே இருந்தன. அவருடைய விசேஷமான பலதரப்பட்ட புறா இனங்கள் சாதாரண புறாக்களிடமிருந்து தனியாகப் பிரித்து பாதுகாக்கப்படவில்லையெனில், அவைகள் மிக விரைவாக தரம் குறைந்து சீர் கேடு அடைந்து பொதுவான நிலைக்கு படிப்படியாக வந்துவிடும்.

❖ இவ்வாறு திரு.டார்வின், தேவன் ஒவ்வொரு உயிரினங்களையும் அந்தந்த ஜாதியின்படியே அல்லது இனத்தின் படியாகவே சிருஷ்டித்தார் என்றும், அந்த ஜாதிகள், புதிய ஜாதிகளை உருவாக்குவதற்காக கலப்படம் செய்யப்பட்டாலும் அவை இன விருத்தி செய்ய முடியாது என்றும், ஒவ்வொரு ஜாதியும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடையவைகளாய் சிருஷ்டித்தார் என்றும் கூறுகிற வேதாகம வாக்கியத்தை ஆதாரத்துடன் நிலைநிறுத்தியுள்ளார். (ஆதி. 1:11,21,24).

❖ ஒரு இனம் மற்றொரு இனத்திலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதை நிரூபிக்க பரிணாமவாதக்காரர்கள் தவறிவிட்டனர். உதாரணமாக, மனிதனை கீழ்நிலை விலங்கினங்களிலிருந்தும், மனிதனுக்கும் மனித குரங்குக்கும் இடையில் "மறுகட்டுமானம் செய்யப்பட்ட" மண்டை ஓடுகள் மூலம் அவர்களுடைய தயாரிப்பாகிய "விடுபட்டு போன தொடர்புகள்" ஒரு சில பண்டைக்காலத்து விலங்குகளின் மண்டை ஓட்டுத் துண்டுகள் மற்றும் கற்பனைகள் அவர்களை பரிகாசத்துக்குள்ளாக்கிற்று. முக்கியமாக, இப்பொழுது அவர்களுடைய பில்ட்டௌன் "Piltdown மனிதன்" என்பது தந்திரமான ஏமாற்று வேலை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

❖ வியக்கத்தக்க கண்டுபிடிப்புகளும் நம்முடைய நாளில் அதிகரித்துக் கொண்டிருக்கும் அறிவும் மனிதன் மேலும் மேலும் உயர்ந்த நிலையில் பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறதாக நிரூபிக்கிறது என்று பரிணாமக்காரர்கள் கோருகின்றனர். ஆனால், இந்த காரியங்கள் பரிணாமவாதத்தை நிரூபிக்கவில்லை; ஏனெனில் அச்சடித்தல் முறை போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும்கூட இப்பொழுதும் மனிதனுடைய மூளையின் திறன் முன்பு இருந்ததைவிட சிறந்ததாக இல்லை. மனிதன் தன் மூளைத்திறனை உபயோகப்படுத்த இப்பொழுது அதிகமாக வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறான்.

❖ உங்களுக்குத் தெரியுமா? பண்டைக் கால நாகரீகங்கள் மற்றும் முற்காலத்து கலை வல்லுனர்களும் மனிதனுடைய மூளையின் திறன் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது சிறந்ததாக இல்லை என்பதைக் காட்டுகின்றன.

❖ அறிவுப் பெருக்கம், பயணங்கள், கண்டுபிடிப்புகள் முதலானவற்றிற்கு உண்மையான காரணம் நாம் "முடிவு காலத்தில்" இருக்கிறோம் என்பதே, என்று வேதாகமம் காட்டுகிறது. இதைக் குறித்து "**அநேகர் இங்கும், அங்கும் ஓடுவார்கள், அறிவும் பெருகிப்போம்**" (தானி. 12 : 4) என்றும் அதன் பலனாக மகா உபத்திரவ காலம் (வசனம் 1; மத். 24 : 21) ஏற்படும் என்றும், வேதாகமம் குறிப்பிடுகிறது. அந்த உபத்திரவ காலத்தில்தான் 1914-ம் ஆண்டு முதல் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

❖ வேதாகமம் இவ்விதமாக போதிக்கிறது: (1) மனிதனுடைய மெய்யான ஆதி பூரணம் - மனிதனுடைய விஷயத்தில், கீழ்நிலை விலங்கினங்கள் விஷயத்தில் உள்ளது போல (ஆதி. 1:24) தேவன் பூமியானது பிறப்பிக்க வேண்டும் என்று மாத்திரம் ஆணை பிறப்பிக்கவில்லை; இவ்வாறாக ஒரு முன்னேற்றத்தை (வித்தியாசத்தை) குறிப்பாக உணர்த்தியிருக்கிறார். ஆனால் அவர் ஒரு நேரடி செயல் மூலம் "**மனிதனை தம்முடைய சொந்த** (மனம், சன்மார்க்கம் மற்றும் மத ரீதியில், ஆனால் சரீரப்பிரகாரமாக அல்ல) **ரூபத்தின் படியும், சாயலாகவும் சிருஷ்டித்தார்.**" (ஆதி. 1:26,27; 2:7,21-23). அது "மிகவும் நல்லதாகவும்,"

"பூரணமானதாகவும்" "நேர்மையானதாகவும் இருந்தது." ஆதி. 1:31; உபா. 32:4; பிர. 7:29). ஆகவே, திட்டவட்டமான தேவ நீதிக்கு முன்பாக ஜீவனுக்கான சோதனையில் நிற்பதற்கு தகுதியாகக் காணப்பட வேண்டும்.

❖ மேலும் வேதாகமம் கற்பிக்கிறது என்னவெனில்: (2) பூரணத்திலிருந்து மனிதனுடைய வீழ்ச்சி - சோதனையில், விரும்பியதைத் தேர்ந்தெடுக்கும் சுயாதீனமுடையவராக இருந்த முதல் மனிதனாகிய ஆதாம், தேவனுக்கு கீழ்ப்படியாமலிருப்பதைத் தெரிந்து கொண்டார். அதன் பலனாக, பூரணத்திலிருந்து பாவத்துக்குள் வீழ்ந்து, அதன் தண்டனையாகிய மரணத்தை அறுவடை செய்தார். மரணத்தீர்ப்பு ஆதாம் மீதும், அவருடைய அனைத்து சந்ததியார் மீதும் விதிக்கப்பட்டது (ஆதி. 3; ரோம.5:12-19; 1 கொரி. 15:21, 22) என்று வேதாகமம் போதிக்கிறது.

❖ பூரணத்திலிருந்து ஆதாமின் வீழ்ச்சியை சரிசெய்வதற்கான தேவனுடைய பூரண விஷ முறிவு மருந்து பற்றியும் வேதாகமம் கூறுகிறது. அது, (3) மீட்கும் பொருள் ஆகும். ஆதாமுக்காகவும், அவனுடைய அரையில் இருந்த முழு மனுக்குலத்துக்காகவும், சரி நிகரான விலைக்கிரயமாக "கிறிஸ்து இயேசுவாகிய மனிதனால்" அவருடைய பூரண ஜீவன் தாமாக முன் வந்து கொடுக்கப்பட்டது. (1 தீமோ. 2:4-6; மத். 20:28; ரோம. 5:18,19; 1 யோவா. 2:2; யோவா. 3:16). அதன் விளைவாக, (4) இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தல் ஏற்படுகிறது. அது, மனுக்குலத்தில் "எவரெல்லாம் விரும்புகிறார்களோ" அவர்களை ஆதாம் ஆதியில் பெற்றிருந்த அதே மனுஷீக பூரண நிலைக்கு பூமியில் திரும்பக் கொண்டு வருதலாகும். (தெரிந்தெடுப்புக்குட்பட்டவர்கள் பொதுவான மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு பரத்துக்குரிய வெகுமதியை பெற்றுக் கொண்டனர். - யோவா. 14:1-3; எபி. 10:34). "**உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் திரும்பக் கொடுக்கப்படும் காலங்களில்**" உலகத்தார் பூரண நிலைக்கு திரும்பக் கொண்டு வரப்படுதல் நடக்கும். அப்பொழுது இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு, பொதுவான மனுக்குலம் மரணத்திலிருந்து விழித்தெழும்பும். (அப். 3:19-23; 15:14-17; ரோம. 8:19-23; யோவா. 5:28,29).

❖ உங்களுக்குத் தெரியுமா: மனிதன் கீழ்நிலை விலங்குகளிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்தவன் என்றும் அதன் காரணமாக, மேலும் மேலும் உயர்வான நிலையில் பரிணாம வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறான் என்றும் பரிணாமவாதம் போதிக்கிறபடியால், இது (1) மனிதனுடைய ஆதி பூரணத்தையும், திட்டவட்டமான நீதிக்கு முன்பாக, ஜீவனுக்கான சோதனையில் நிற்கும் அவனுடைய தகுதியையும் மறுக்கிறது.

❖ மனிதன் ஓர் மனிதக் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்தவன் என்று பரிணாமவாதக் கொள்கை உரிமை கோருகிறபடியால் மனிதக் குரங்காக இருந்த, முதல் மனிதன், அதன் பிறகு, சீராக வளர்ச்சியடைந்திருக்கிறான் என்று பரிணாமவாதம் கூறுகிறது. (ஓர் பரிணாமவாதக் கொள்கைக்காரர், "மனிதன் விழுந்தாலும், அவன் மேல்நோக்கியே விழுந்தான்" என்று கூறுகிறார்; இது இரண்டாவதான (2) மனிதன் பூரணத்திலிருந்து, பாவத்திலும், மரணத்திலும் விழுந்தான் என்று வேதம் கூறுவதை மறுக்கிறது.

❖ பரிணாமவாதம் (a) முதல் மனிதன் ஓர் மனிதக் குரங்கு என்றும், அதைத் தொடர்ந்து பூரண மனுஷனாகிய இயேசு அவனுக்காக மீட்கும் பொருளாயிருக்க (சரிநிகரான விலைக்கிரயமாக) முடியாது என்றும், மிகவும் தரம் தாழ்ந்த மனிதன்கூட பரிணாமவாதத்தின் குரங்கு மனிதனுக்கு சரிசமமாயிருப்பதைவிட மேலான நிலைமையை பெறுகிறான் என்றும் போதிக்கிறபடியாலும், (b) அப்படிப்பட்ட மனிதன் ஒரே சீராக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறான் என கூறுவதின் மூலமும் பரிணாமவாதமானது - ஓர் இரட்சகர் தேவையில்லையென்றும் கூறி மூன்றாவதான, (3) மீட்கும் பொருளையும் மறுக்கிறது.

❖ முதல் மனிதன் ஓர் மனிதக் குரங்காக இருந்தான் என்று பரிணாமவாதம் போதிப்பதால், முதல் மனிதனின் நிலைக்கு மனுக்குலத்தை திரும்ப கொண்டு வருதல் சொல்ல முடியாத சாபமாயிருக்கும். இவ்வாறு பரிணாமவாதமானது நான்காவதான (4) இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலையும் மறுக்கிறது.

❖ பரிணாமவாதக் கொள்கை இவ்வாறு மற்ற இதர காரியங்களோடு, வேதாகமத்தின் இந்த நான்கு உபதேசங்களையும் மறுக்கிறபடியால், வேதத்தை உண்மையாக விசுவாசிப்பவர் எவ்விதத்திலும் பரிணாமவாதக்காரராக இருக்க முடியாது. அதேபோல இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையிலும் இருக்க முடியாது.

❖ இது ஒவ்வொரு பரிணாமவாதக்காரரையும் பொய்யராக்கினாலும் (ரோம. 3:4), தேவன் உண்மையானவரென நாம் ஏற்க வேண்டும். அவர்களுடைய கோட்பாடு "**விஞ்ஞானமென்று பொய்யாய் பெயர் பெற்றிருக்கிற**" கொள்கையாகும். (1 தீமோ. 6:20). ***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**